Registered with the Registrar of NewsPapers for India R. No. 62828 / 95

Date of Publication : 1st of Every month | Date of Posting : 5th & 6th of Every month

Regd. No. TN / CC (S) DN / 119 / 12-14

Licensed to Post without Prepayment WPP No. TN/PMG(CCR)/WPP-608/12-14

வேணு : 18 | ஏப்ரல் 2013 | கானம் : 9



Published by S.Srinivasan on behalf of Guruji Sri Muralidhara Swamigal Mission, New No.2, Old No.24, Netaji Nagar, Jafferkhanpet, Chennai - 600083 and Printed by Mr.R.Kumaravel of Raj Thilak Printers (P) Ltd, 1/545A, Sivakasi Co-Op Society Industrial Estate, Sivakasi. Editor: S.Sridhar

**Related Websites : www.namadwaar.org** **Email:contact@namadwaar.org**

Please renew your subscription to MADHURAMURALI

ஸ்ரீ ஹரி:

தனி பிரதி Rs.10/-

# மதுரமுரளி

MADHURA MURALI

ஆண்டு சந்தா ரூ120/-

மஹாரண்யம் ஸ்ரீஸ்ரீ முரளீதர ஸ்வாமிஜி அவர்கள் அருளாசியுடன்
வெளிவரும் தெய்வீக மாதப் பத்திரிக்கை



ஹரே ராம ஹரே ராம ராம ராம ஹரே ஹரே
ஹரே க்ருஷ்ண ஹரே க்ருஷ்ண க்ருஷ்ண க்ருஷ்ண ஹரே ஹரே

வேணு : 18 | ஏப்ரல் 2013 | கானம் : 9

Delivered by India Post www.indiapost.gov.in



மார்ச் 3 பெங்களூரு ராமையா ரோடு - ஸ்ரீகல்யாண வெங்கடேஸ்வரா தேவாலயாவில் ஸ்ரீபாலசுப்ரமண்ய ஸ்வாமி தேவஸ்தான ஸமிதி இணைந்து நடத்திய சத்சங்கம்





பிப்ரவரி 23 Hindu Spiritual & Service Fair 2013 - AM Jain College Meenambakkam Chennai - நமது சைதன்ய மஹாப்ரபு நாம பிக்ஷா கேந்திரா புத்தக ஸ்டால்

மார்ச் 17 சோளிங்கர் ராமமூர்த்தி மஹாலில் ஸ்ரீமத் பாகவத மாஹாத்மிய உபன்யாசம்



Please renew your subscription to MADHURAMURALI



மார்ச் 10 – மஹாசிவராத்திரி –
மதுரபுரி ஆஸ்ரம வளாக
கன்யாகுமரி ஸ்ரீஜய ஹனுமான்
பிரதிஷ்டா தினம்





Please renew your subscription to MADHURAMURALI



மார்ச் 9 மஹாசிவராத்திரியை முன்னிட்டு - மதுரபுரி ஆஸ்ரமத்தில் - பொழிச்சலூர் கோப குடீர குழந்தைகளுடன்



மார்ச் 4 கர்நாடக மாநிலம் செம்பகெரே கிராமத்தில் நாமகீர்த்தனம் செய்த குழந்தைகளுக்கு பிரசாதம் வழங்குதல்





மார்ச் 10 - மஹாசிவராத்திரி - வேதபாராயணத்துடன் பூஜை - மதுரபுரி ஆஸ்ரமம்



மார்ச் 1 - ஸ்ரீரங்கம் ஸ்ரீப்ரேமிக வேதாஸ்ரமத்தில் குருகுல வித்யார்த்திகளுடன்



Please renew your subscription to MADHURAMURALI

ஸ்ரீ ஹரி :
மஹாரண்யம் ஸ்ரீ ஸ்ரீ முரளீதர ஸ்வாமிஜி
அவர்கள் அருளாசியுடன்

# மதுரமுரளி

தெய்வீக மாதப் பத்திரிகை

வேணு: 18 ஏப்ரல் 2013 கானம்: 9

**ஹரே ராம ஹரே ராம ராம ராம ஹரே ஹரே**
**ஹரே க்ருஷ்ண ஹரே க்ருஷ்ண க்ருஷ்ண க்ருஷ்ண ஹரே ஹரே**

**இந்த இதழில் ...**

| | |
|---|---|
| மதுரமான மஹனீயர் - 205 | 4 |
| பக்தர்களின் கேள்விகளுக்கு ஸ்ரீஸ்வாமிஜியின் பதில்கள் | 09 |
| பாகவத பழம் - 37 | 11 |
| ஆத்மஸ்தானம் | 15 |
| பிரார்த்தனை | 17 |
| ஸ்வாமி ராமகிருஷ்ணானந்தர் | 18 |
| சக்தி தரும் சங்கீர்த்தனம் | 27 |
| ஆலய தரிசனம் | 30 |
| வாசகருக்கு ஒரு வேண்டுகோள் | 32 |
| பாலகர்களுக்கு ஒரு கதை | 35 |
| பிருந்தாவனமும் நந்தகுமாரனும் | 40 |
| அப்பாலுக்கு அப்பால் | 42 |

**நூநம் மே பகவாந் ப்ரீதோ விஷ்ணு: கேநாபி கர்மணா ।**
**நிர்வேதோऽயம் துராசாயா யந்மே ஜாத: ஸுகாவஹ: ॥**

ஸ்ரீமத்பாகவதம் 11:8:37

நான் பகவானுக்கு பிடித்த நல்ல காரியம் ஒன்று செய்துள்ளேன் போலும். அதனால் பகவான் திருப்தி அடைந்ததற்கு அடையாளமாக எனக்கு தீய விஷயங்களில் வெறுப்பை அருளி இருக்கிறார். மஹாவிஷ்ணுவானவர், இப்படி வைராக்கியத்தை அருளி, சுகம் தரும் வழி இது என்று எனக்கு காட்டி இருக்கிறார்.

Please renew your subscription to MADHURAMURALI

# ஸ்ரீவல்லபாச்சார்யார் அருளிய ஸ்ரீயமுனாஷ்டகம்

நமாமி யமுனாம் அஹம் ஸகல ஸித்தி ஹேதும் முதா
முராரி பத பங்கஜ ஸ்புரத் அமந்த ரேணூத்கடாம்
தடஸ்த நவ கானன ப்ரகடமோத புஷ்பாம்புனா
ஸுராஸுரஸுபூஜித ஸ்மரபிது: ச்ரியம் பிப்ரதீம்

களிந்த கிரி மஸ்தகே பதத் அமந்த பூரோஜ்வலா
விலாஸ கமனோல்லஸத் ப்ரகட கண்ட சைலோன்னதா
ஸகோஷ கதி தந்துரா ஸமதிரூட டோலோத்தமா
முகுந்த ரதி வர்தினீ ஜயதி பத்மபந்தோ: ஸுதா

புவம் புவனபாவனீம் அதிகதாம் அனேகஸ்வனை:
ப்ரியாபிரிவ ஸேவிதாம் ஸுக மயூர ஹம்ஸாதிபி:
தரங்கபுஜ கங்கண ப்ரகடமுக்திகா வாலுகா
நிதம்ப தட ஸுந்தரீம் நமத க்ருஷ்ணதுர்யப்ரியாம்

அனந்த குண பூஷிதே சிவ விரிஞ்சி தேவஸ்துதே
கனாகன நிபே ஸதா த்ருவ பராசர அபீஷ்டதே
விஸுத்த மதுரா தடே ஸகல கோப கோபீ வ்ருதே
க்ருபாஜலதிஸம்ச்ரிதே மம மன: சுகம் பாவய

யயா சரணபத்மஜா முரரிபோ: ப்ரியம் பாவுகா
ஸமாகமனதோ பவத் ஸகலஸித்திதா ஸேவதாம்
தயா ஸத்ருசதாம் இயாத் கமலஜா ஸபத்னீவ யத்
ஹரிப்ரியகளிந்தயா மனஸி மே ஸதா ஸ்தீயதாம்


Please renew your subscription to MADHURAMURALI

நமோஸ்து யமுனே ஸதா தவ சரித்ரம் அத்யத்புதம்
ந ஜாது யமயாதனா பவதி தே பய: பானத:
யமோடஅபி பகினீஸுதான் கதமு ஹந்தி துஷ்டானபி
ப்ரியோ பவதி ஸேவனாத் தவ ஹரே: யதா கோபிகா:

மமாஸ்து தவ ஸந்நிதௌ தனுநவத்வம் ஏதாவதா
ந துர்லபதமா ரதி: முரரிபௌ முகுந்தப்ரியே
அதோடஸ்து தவ லாலனா ஸுரதுனீ பரம் ஸங்கமாத்
தவைவ புவி கீர்திகா ந து கதாபி புஷ்டிஸ்திதை:

ஸ்திதிம் தவ கரோதி க: கமலஜாஸபத்னி ப்ரியே
ஹரேர் யதனுஸேவயா பவதி ஸௌக்யம் ஆமோக்ஷத:
இயம் தவ கதா அதிகா ஸகல கோபிகா ஸங்கம
ஸ்மர ச்ரம ஜலாணுபி: ஸகல காத்ரஜை: ஸங்கம:

தவாஷ்டகமிதம் முதா படதி ஸுரஸுதே ஸதா
ஸமஸ்த துரித க்ஷயோ பவதி வை முகுந்தே ரதி:
தயா ஸகலஸித்தயோ முரரிபுஸ்ச ஸந்துஷ்யதி
ஸ்வபாவ விஜயோ பவேத் வததி வல்லப: ஸ்ரீஹரே:

---




முன் அட்டை – மார்ச் 15–17, 2013 – ப்ரேமிக வித்யா கேந்திரா, குர்கானில் மூன்றாமாண்டு விழா – பரனூர் மஹாத்மா ஸ்ரீ ஸ்ரீ கிருஷ்ண ப்ரேமி ஸ்வாமிகள்
பின் அட்டை – பெங்களூர் ஸ்ரீசுந்தர ஆஞ்சநேயர் கோவிலில் ஸ்ரீஸ்வாமிஜி



Please renew your subscription to MADHURAMURALI

# மதுரமான மஹனீயர் – 205

டாக்டர்.ஆ.பாக்யநாதன்

ஸ்ரீஸ்வாமிஜி அவர்களின் அருளுரைகளையும், உபதேசங்களையும், நேரிலோ, புத்தகத்தின் வாயிலோ அல்லது ஒலித்தட்டுகள் மூலமோ கேட்டவர்கள், அந்த உபதேசங்களில் ஒரு இனம் புரியாத ஈர்ப்பை உணருவர். ஆன்மீக விஷயமாகட்டும் உலகியல் விஷயமாகட்டும், ஸ்ரீஸ்வாமிஜி அவர்களின் கருத்துக்கள் தற்காலத்திற்கு ஏற்றபடி புதுமையான கோணத்திலும், பாரதத்தின் பாரம்பரியத்தை பிரதிபலிப்பவையாகவும் இருக்கும். அது மட்டுமல்லாமல், அவை கேட்போரின் உள்ளங்களில் புகுந்து ஒரு பெரிய மாற்றத்தையும் உண்டாக்கும். உபதேசங்களை கேட்போர் மனதில், ஸ்ரீஸ்வாமிஜி அவர்களை தரிசிக்க வேண்டும் என்ற அவா எளிதில் தோன்றும்.

நமது சத்சங்கத்து நிரஞ்சன், வடஆற்காடு மாவட்டத்தில் உள்ள ஒரு கிராமத்தை சேர்ந்தவர். நிரஞ்சன் பரத்வாஜ் படித்து வளர்ந்தது எல்லாம் சென்னைதான். படிப்பிற்கு பிறகு, சென்னையில் ஒரு பன்னாட்டு நிறுவனத்தில் 2006 டிசம்பரில் வேலைக்குச் சேர்ந்தார். அதே கம்பெனியில்தான், நமது சத்சங்கத்தை சேர்ந்த முரளிஜியும் வேலை பார்த்து வந்தார். முரளிஜியின் மூலம், ஸ்ரீஸ்வாமிஜியின் நூல்கள் பலவற்றை நிரஞ்சன் படிக்க வாய்ப்பு அமைந்தது. அதில் ஸ்ரீரமண மஹரிஷிகள் தமிழாக்கம் செய்த தேவிகாலோத்திரத்திற்கு, ஸ்ரீஸ்வாமிஜி அவர்கள் தந்திருந்த விளக்க உரையானது நிரஞ்சனுக்கு மிகவும் பிடித்து இருந்தது. ஸ்ரீஸ்வாமிஜி அவர்களின் உரைகளை கேட்க, மேலும் ஆவல் கொண்டார். ஸ்ரீரமண மஹரிஷிகள் அருளிய அக்ஷரமணமாலை பாடல்களுக்கு, ஸ்ரீஸ்வாமிஜி அவர்களின் உபன்யாசம் அடங்கிய ஒலித்தட்டுக்களை வாங்க, அசோக் நகர் அலுவலகத்திற்கு நிரஞ்சன் சென்றார்.



Please renew your subscription to MADHURAMURALI

அப்பொழுது தற்செயலாக ஸ்ரீஸ்வாமிஜியும், அசோக் நகர் அலுவலகத்திற்கு வந்தார்கள். அறிமுகமான பிறகு, நிரஞ்சனை பார்த்து சில விவரங்களை ஸ்ரீஸ்வாமிஜி கேட்டார்கள். நிரஞ்சன், தான் அகோபில மடத்து பள்ளியில் படித்ததாக சொன்னார். அப்பொழுது, ஸ்ரீஸ்வாமிஜி "என்னை அங்கு பார்த்து இருக்கிறாயா? நான் அங்கு வந்து இருக்கிறேன்" என்று வினவ, "இல்லை, நான் பார்த்தது இல்லை" என்று நிரஞ்சனிடம் பதில் வரவே, "**Your face is very familiar to me**" என்று ஸ்ரீஸ்வாமிஜி சட்டென சொல்லி விட்டு அனுப்பி விட்டார். அதற்குப்பின், வாய்ப்பு கிடைக்கும்பொழுதெல்லாம், ஸ்ரீஸ்வாமிஜி அவர்களை, ப்ரேமிக பவனத்தில், தரிசனம் செய்து வந்தார் நிரஞ்சன்.

நிரஞ்சன், தன் மனதில் ஆழமாக பதிந்திருந்த ஒரு விஷயத்தை பகிர்ந்து கொண்டார். டிசம்பர் 2009இல் காஞ்சி மஹாஸ்வாமிகள் ஆராதனை தினம். அன்று, ஆஸ்ரமத்தில் நிரஞ்சனை ஸ்ரீஸ்வாமிஜி அவர்கள் கூப்பிட்டார்கள். தியானத்தில் இருந்த ஸ்ரீஸ்வாமிஜி தன் முன்னே நிரஞ்சனை உட்கார சொன்னார்கள். சில நிமிடங்கள் கழித்து "உனக்கு என்ன தெரிகிறது" என்று ஸ்ரீஸ்வாமிஜி கேட்டார்கள். நிரஞ்சன் உடனே, "மனது கொஞ்சம் லேசாக இருக்கிறது" என்று பதில் சொல்லி இருக்கிறார். அப்பொழுது ஸ்ரீஸ்வாமிஜி மேலே எதுவும் பேசாமல் "**You are my child**" என்று இரண்டு முறை சொன்னார்கள். அது, நிரஞ்சன் மனதை தொடும்படி அமைந்து விட்டது.

2011இல், நிரஞ்சனுக்கு, அவர் வேலை பார்த்து வந்திருந்த கம்பெனியின் வெளிநாட்டு கிளை ஒன்றில், வேலை பார்க்க வாய்ப்பு கிடைத்தது. ஸ்ரீஸ்வாமிஜியின் அனுமதி பெற்ற பின், நிரஞ்சன், வெளிநாடு செல்ல ஆயத்தங்கள் செய்தார். அதே சமயத்தில்தான், ஸ்ரீஸ்வாமிஜி எர்ணாகுளம் செல்வதாக இருந்தது எர்ணாகுளம் போகும் முன் ஸ்ரீஸ்வாமிஜி அவர்கள், நிரஞ்சன் ஏர்போர்ட் கிளம்பும் முன்னர் கூப்பிட்டு **“Have a Safe Journey”** என்று ஆசியும் வாழ்த்துமாக சொல்லி அனுப்பினார்கள்.


Please renew your subscription to MADHURAMURALI

ஸ்ரீஸ்வாமிஜி அவர்களுக்கு, வெளிநாடு நலமாய் சென்றடைந்த உடனே, தகவல் தெரிவித்தார் நிரஞ்சன். அன்றைய தினம் அன்பர் ஹரியிடமிருந்து ஒரு செய்தி நிரஞ்சனுக்கு வந்திருந்தது. அதில் ஸ்ரீஸ்வாமிஜி அவர்கள், நிரஞ்சனிடம் "புது வேலையில் சேர்ந்து செட்டில் ஆகி இருப்பாய் என நினைக்கிறேன். உத்யோக நிலவரங்களை பற்றி அடிக்கடி தெரிவித்து வா. புது இடத்தில் நீ எப்படி இருக்கிறாயோ என்று உன்னை பற்றியே நினைத்து கொண்டு இருக்கிறேன்" என்று எழுதி இருந்தார்கள்.

ஒருவர், ஸ்ரீஸ்வாமிஜி அவர்களிடம் வந்து, தனது துயரத்தை தெரிவித்து, பிராத்தித்து கொண்டாரெனில், அந்த அன்பரின் கஷ்டத்தை நினைத்து, ஸ்ரீஸ்வாமிஜி அவர்கள் பிரார்த்தனை செய்த வண்ணம் இருப்பார்கள். அன்பர்கள் தங்களை பற்றி கவலைப்படுவதை விடவும், ஸ்ரீஸ்வாமிஜி அவர்கள், அன்பர்களை பற்றி அதிகம் சிந்திப்பார்கள். அப்படி அவர் கவலைப்பட ஆரம்பித்தாரென்றால், அன்பரின் நன்மை என்னவோ கூடி விடும். மேலும் ஸ்ரீஸ்வாமிஜி அவர்களின் அக்கறைக்கு பின்னால் ஏதோ காரணம் இருப்பதும் தெரிய வரும்.

வெளியூர் சென்றிருக்கும் ஒருவரைப் பற்றி தாயார்தானே அதிகம் சிந்திப்பார். "பால் நினைந்தூட்டும் தாயினும் சால பரிந்து" என்று அல்லவா பக்தர்கள் பாடி இருக்கிறார்கள்! நிரஞ்சனுக்கும், ஸ்ரீஸ்வாமிஜி அவர்களிடம் இருந்து வந்த தகவலை படித்தவுடன், மனது உருகி விட்டது. இது 2011 ஜனவரி மாத கடைசி வாரத்தில் நடந்தது .

ஒரு சில மாதங்கள் கழித்து, நிரஞ்சன் சென்றிருந்த தேசத்தில், ஒரு உள்நாட்டு கலவரம் வெடித்தது. அங்கேயே இருப்பவர்களுக்கு இது பழக்கமானது. ஆனால் இம்முறை கலவரக்காரர்களை சுட்டு தள்ள அரசாணையும் பிறப்பிக்கப்படும் அளவு, இது மிக பெரிதாக போனது. எமர்ஜென்சி டிக்ளேர் செய்ய போவதாக வேறு அறிவிப்பு வந்தது. 3-4 நாட்களுக்கு யாரும் வெளி வர வேண்டாம் என்று பேச்சு அடிபட்டது. சாலைகளில்


Please renew your subscription to MADHURAMURALI

சுதந்திரமாக போக முடியாத சூழ்நிலை. நிரஞ்சனுக்கு வெளிநாடு வந்து சேர்ந்தபின், எம்ப்ளாய்மெண்ட் ப்ரொசிஜர் எதுவும் முடிவு பெறவில்லை என்பதால், உடனே வெளியேற முடியாத சூழ்நிலை வேறு இருந்தது.

ஸ்ரீஸ்வாமிஜி அவர்களிடம், விவரங்களை முழுவதுமாக தெரிவித்து வந்தார் நிரஞ்சன். ஸ்ரீஸ்வாமிஜி அவர்கள், பல அன்பர்கள் மூலமாக தைரியம் கொடுத்து கொண்டே இருந்தார். மேலும் "எப்படியும் நலமாக வந்து சேருவாய்; கவலைப்படாதே" என்று ஆறுதல் அளித்தவாறே இருந்தார்கள். "வெளியே எட்டிப்பார். ஊரில் கொஞ்சம் அமைதி நிலவுவது போல் தெரிந்தால், நீ ஏர்போர்ட் வந்து விட வேண்டும். பின் பாதுகாப்பாக வந்து விடலாம்" என்றும் நிரஞ்சனிடம் அபிப்ராயப்பட்டார்கள்.

நிரஞ்சனுக்கு அந்த சமயத்தில் இருந்த தவிப்பும் கவலையும், வார்த்தைகளில் சொல்லி விட முடியாத ஒன்று. வெளிநாட்டில் ஆதரவுக்கு என்று ஒருவரும் இல்லாத இடத்தில் மாட்டி கொண்டால் எப்படி இருக்கும்? அப்பொழுது அவருக்கு ஸ்ரீஸ்வாமிஜி அவர்களின் தைரியம் கொடுக்கும் வார்த்தைகள்தான், பக்க பலமாக இருந்தது. ஆனால், உண்மையில் தாய் போன்ற குருநாதரின் உள்ளம்தான், நிரஞ்சனை விட அதிகம் தவித்து இருந்தது.

குருநாதர் சொன்னது போலவே, இடையில் ஊரில் அமைதியான ஒரு சமயம் நிலவவும், ஊரை விட்டு கிளம்ப சூழ்நிலை ஏற்பட்டது. அரசாங்கமே விடுமுறை அறிவித்தது மட்டுமல்லாமல், இரவோடு இரவாக வெளிநாட்டவர் எல்லோரும் தம் தம் சொந்த நாட்டிற்கு கிளம்பி சென்று விட வேண்டும் என்றும், உத்திரவு பிறப்பித்தது. நிரஞ்சன் இருக்குமிடத்தில் இருந்து ஏர்போர்ட் 10-15 கி.மீ. தூரம். நாட்டு மக்கள் எல்லாம் எமர்ஜென்சி வந்து விடப்போகிறதே என்று, மறுநாள் ரேஷன் பொருட்களை வாங்கி, ஸ்டாக் செய்ய ஆரம்பித்து விட்டார்கள். அதனால், கொஞ்சம் ஜன நடமாட்டம் தெருக்களில் தென்பட



Please renew your subscription to MADHURAMURALI

ஆரம்பித்தது. தற்காலிகமாக அமைதி தோன்றியது. உடனே டாக்சி பிடித்து, ஸ்ரீஸ்வாமிஜி அவர்களின் அறிவுரைப்படி, இரவு ஒன்பது மணி விமானத்திற்கு, காலை 9மணிக்கே ஏர்போர்ட் வந்து விட்டார் நிரஞ்சன். சென்னை வந்து சேர்ந்து, ஸ்ரீஸ்வாமிஜியை தரிசனம் செய்கையில் அவர், "அப்பாடா ஒருவழியாக வந்து சேர்ந்தாயா? நீ ரொம்ப சமர்த்து. திரும்பி வந்தது மிகவும் சந்தோஷம்"" என்று சொல்லி, சென்னையிலேயே வேலை தேட சொல்லியும் ஆக்ஞாபித்தார்கள்.

பின்னர், ஒருவழியாக அந்த கம்பெனி உத்யோகத்திலிருந்து முழுமையாக விடைபெற்றார் நிரஞ்சன். நிரஞ்சன் வெளிநாட்டில் இருக்கும்பொழுதே, மும்பை மற்றும் சென்னையில் வேலை வாய்ப்புகள் வந்தன. ஒரு சத்சங்கத்து அன்பரின் உதவியால், நிரஞ்சனுக்கு ஒரு நல்ல வேலை சென்னையிலேயே கிடைத்தது. இப்பொழுது அந்த நல்ல வேலையில் இருக்கிறார் நிரஞ்சன்,

குருவின் அருளும் அன்பும் வாய்க்க பெற்றவருக்கு வாழ்க்கை என்பது மிக சுலபமும், சுககரமுமான விஷயம் ஆகி விடும் அல்லவா!

---

## *"ஸ்ரீமத் பகவத்கீதா" பாராயணம்*

கடந்த மார்ச் மாதம் 4ஆம் தேதி, சென்னை பெசன்ட் நகர் பூஜா மண்டபத்தில், ஸ்ரீமஹாபெரியவாளின் அனுஷ நக்ஷத்திரத்தை முன்னிட்டு, ஸ்ரீசேதுராமன் மற்றும் ஸ்ரீகுருவாயூரப்பன் அவர்களால், விசேஷ பூஜையானது ஏற்பாடு செய்யப்பட்டு இருந்தது. நமது ஸ்ரீசாந்தீபனி குருகுல பாடசாலை வித்யார்த்திகளும், அதில் பங்கு கொண்டு "ஸ்ரீமத் பகவத்கீதா" பாராயணம் செய்தனர். பூர்த்தியில், நமது பாடசாலைக்கு ஆப்தரும் வேத ரக்ஷணத்திற்காக பல நற்பணிகளை செய்து வருபவருமான ப்ரும்மஸ்ரீ **Dr.S.**யக்ஞசுப்ரமணியன் அவர்கள் ஸ்ரீமஹாபெரியவாளை பற்றியும், வேதத்தின் மஹிமை பற்றியும் அதை காக்க வேண்டிய அவசியத்தை பற்றியும், மிக அழகாக உபன்யாசம் செய்தார்கள்.



Please renew your subscription to MADHURAMURALI



# பக்தர்களின் கேள்விகளுக்கு ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்களின் பதில்கள்

கேள்வி: நீங்கள் என்னை, 'எல்லோருக்கும் நல்லது செய்' என்கின்றீர்கள். நான், என் வாழ்வில், பலருக்கும் பலவிதத்தில் நன்மை செய்துள்ளேன். ஆனால், அவர்கள் யாரும் எனக்கு எந்த நன்மையும் செய்ததில்லை. அதோடு மட்டுமல்லாமல், அவர்கள் எனக்கு கொடுத்த கஷ்டங்கள் கொஞ்ச நஞ்சமில்லை. இப்படியிருக்க, நான் எப்படி எல்லோருக்கும் நன்மை செய்யமுடியும்?

பதில்: நாய் நன்றியுள்ள பிராணி. நன்றி என்பது அதன் சுபாவம். அது புத்தகத்தில் படித்தோ, புராணங்களை கேட்டோ, மற்றவர்களின் உபதேசத்தினாலோ நன்றியுள்ளதாக மாறவில்லை. நன்றியே இல்லாத ஒருவன், அந்த நாயை வளர்த்தாலும் கூட, அந்த நாய் அவனிடம் நன்றியுள்ளதாகவே உள்ளது. அது போல், நல்லது செய்தல், கெடுதல் செய்தல் என்பது, அவரவர்களுடைய சுபாவம். நாம் நம்முடைய சுபாவத்தை, எந்த நிலையிலும் மாற்றிக் கொள்ளக்கூடாது. நாம் நல்ல ஆத்ம குணங்களுடன் இருந்தால், அதை பார்த்து கோபாலன் மகிழ்கின்றான்.


கேள்வி: ப்ரேம பக்தியின் அடையாளங்களாக நீங்கள் கண்களில் நீர் வருதல், மேனி சிலிர்த்தல், நடுக்கம், தொண்டை தழுதழுத்தல், மூர்ச்சை என்று அடுக்கிக்கொண்டே போகின்றீர்களே. ஆனால், அவைகள் நமக்கு ஸித்திக்காததற்கு காரணம் என்ன?

பதில்: நம்மில் பலர், தம்மை பக்தர்களாகவே நினைத்துக் கொண்டுள்ளோம். அதாவது, நமக்கு பக்தி ஸித்தித்துவிட்டதாகவே நினைக்கின்றோம். நமக்கு பக்தியில்லை என்று பிரார்த்தித்தால், பகவான் பக்தியை அருளுவார். நாமே நம்மை பெரிய பக்தர்களாக கற்பனை செய்து கொள்வதால், பகவான் பக்தியை தருவது இல்லை போலும்.



Please renew your subscription to MADHURAMURALI








Please renew your subscription to MADHURAMURALI



# பாகவத பழம்

## பாகம் 2 – அத் 17



–ஸ்ரீஸ்வாமிஜி (37)

வேட்டையாடச் சென்ற பரீக்ஷித், சமாதி கைகூடியவராக இருந்த சமீகர் என்ற ரிஷியை அணுகி குடிக்க தண்ணீர் கேட்டான். பரீக்ஷித்திற்கு அவரிடத்திலிருந்து ஒரு பதிலும் வராததால், தன்னை அவர் அவமதித்ததாக நினைத்தான். அவனுக்கு அவரிடம் கோபம் உண்டானது. பக்கத்தில் கிடந்த ஒரு இறந்த பாம்பைத் தூக்கி, அவர் கழுத்தில் போட்டான். நல்ல வம்சத்தில் பிறந்து, கருவிலேயே வாஸுதேவனுடைய தரிசனத்தை அடைந்த பரீக்ஷித், ஸாதுவிடம் அபசாரம் செய்தான். ஒருக்கால், கலிபுருஷனை அன்று பார்த்து உரையாடினானே, அதன் பலனாக இருக்குமோ? விளையாட்டாகக் கூட தீயவர்களிடம் சேர்க்கை செய்யக் கூடாது.

பாம்பைப் போட்டுவிட்டு, அவன் போயே போய் விட்டான். தூரத்தில் தன்னுடைய சகாக்களோடு இருந்த சமீகரின் குமாரர் சிருங்கி, இதை அறிந்து கோபம் அடைந்தான். "சாதுக்களைக் காக்க வேண்டிய அரசனே இப்படி செய்தது அடுக்காது. அவனால் இறந்த பாம்பைத்தானே போட முடிந்தது. நான் நாகலோகத்தில் இருக்கும் பாம்பை அழைக்கின்றேன். விஷ்ணுவினுடைய உடலில் ஏழு நாகங்கள் உண்டு. அதில் அவருடைய இடுப்பில் இருக்கும் நாகத்திற்கு தக்ஷகன் என்று பெயர். அவன்தான் அரசன். அவனையே அழைக்கின்றேன். இப்பொழுது பார்க்கலாம். அரசனுடைய அதிகாரமும் புஜபலமும், படைபலமும் பெரியதா அல்லது ரிஷிகுமாரனான என்னுடைய தவபலம் பெரியதா என்று'' என்று சூளுரைத்தான்.

பக்கத்தில் ஓடிக்கொண்டிருந்த கௌசிகி நதியின் நீரில் ஆசமனம் செய்து, அவனுடைய வாயிலிருந்து சாபம் என்ற வஜ்ராயுதம் வந்து விழுந்தது. "இன்றிலிருந்து ஏழாவது நாள்,



Please renew your subscription to MADHURAMURALI

உன்னை தக்ஷகன் என்ற பாம்பு கடிக்கப் போகின்றது.'' இப்படி சாபம் கொடுத்து விட்டு, ஓடோடி வந்து தந்தையைப் பார்த்தார். தந்தை சமாதி கலைந்து எழுந்தார். நடந்ததை அறிந்தார். அவர் சிருங்கி செய்ததை ஏற்றுக் கொள்ளவில்லை. பரம பாகவதனான பரீக்ஷித்திற்கு நீ செய்தது தகாது. அரசன் இல்லாத ராஜ்யம் பல துக்கங்களை அனுபவிக்கும். சிறிய தவறுக்கு பெரிய தண்டனை கொடுத்துவிட்டாய். நீ இன்னும் பக்குவம் அடையவில்லை. பகவத்பக்தர்கள் தங்களுக்கு கெடுதல் செய்தவர்களுக்கு கெடுதல் செய்ய முடிந்தால் கூட அதை செய்யக்கூடாது'' என்றார். அவர் சுகம், துக்கம் என்பதை சமமாக பார்ப்பவராகையால், பரீக்ஷித் செய்ததைக் குற்றமாக நினைக்கவே இல்லை.

## அத்தியாயம் 18

ஸாதுக்களும் கூட சில சமயங்களில் தவறு இழைத்துவிடுகின்றார்கள். பிறகு, அவர்கள் எப்படி ஸாதுக்கள் ஆவார்கள்? அவர்கள் நம்மைப் போன்று அடிக்கடி தவறு செய்ய மாட்டார்கள். அபூர்வமாக தவறு செய்தபோதும் நம்மைப் போன்று, உலகத்தில் யார்தான் தவறு செய்யமாட்டார்கள் என்பது போன்று பேசி தன் தவறை நியாயப்படுத்த மாட்டார்கள். அதோடு மட்டுமல்லாமல், தான் ஏன் இப்படி செய்தோம் என்று தன்னை நினைத்துக் கூனிக் குறுகிவிடுவார்கள். அப்படித்தான், நம்முடைய பரீக்ஷித்து, தான் சமீகர் என்ற மகரிஷிக்குச் செய்த அபசாரத்தை நினைத்து தனிமையில் கூனிக் குறுகி வருந்தினான். அதற்குத் தண்டனையை அப்பொழுதே விரும்பி எதிர்பார்த்திருந்தான். தனக்கு சமீகர் என்ற ரிஷியின் குமாரன் சிருங்கியால், "தக்ஷகன் என்ற பாம்பு இன்றிலிருந்து ஏழாவது நாள் கடிக்கப்பட்டு இறக்கக் கடவது'' என்று சாபம் ஏற்பட்டதை அறிந்து சந்தோஷப்பட்டான்.

*பரீக்ஷித்து, தான் சமீகர் என்ற மகரிஷிக்குச் செய்த அபசாரத்தை நினைத்து தனிமையில் கூனிக் குறுகி வருந்தினான். அதற்குத் தண்டனையை அப்பொழுதே விரும்பி எதிர்பார்த்திருந்தான்.*



Please renew your subscription to MADHURAMURALI

சாபத்திற்கு எந்த விமோசனமும் பரிகாரமும் செய்வதற்கு அவன் முயலாததோடு மட்டும் அல்லாமல், அந்தக் கணமே மனைவி, மற்றும் ராஜ்யம் எல்லாவற்றையும் துறந்து, கங்கைக் கரைக்கு ஓடி ப்ராயோபவேசம் செய்தான். ப்ராயோபவேசம் என்றால் ப்ராயம் + உபாவிஷத் என்று பொருள் கொள்ளவேண்டும். அதாவது அந்த ஏழுநாட்களுக்கு ஆகாரம், நீர், உறக்கம் இன்றி இருப்பதாக சங்கல்பம் செய்துகொண்டான்.

வாஸுதேவனின் திருவடிக் கமலங்களிலிருந்து விழுந்து, கைலாசபதியான பரமேஸ்வனை நீராட்டி வரும் கங்கையை, ப்ராணன் போகின்ற காலத்திலாவது ஒருவன் சேவிக்க வேண்டும். கங்கைக் கரையை அடைந்த பரீக்ஷித்து, வாசுதேவனுடைய திவ்யமான சரணங்களை த்யானித்து அமர்ந்திருந்தான். பல சாதுக்கள் கங்கையில் நீராடி, சித்த சுத்தியை அடைவதற்கு வருவார்கள். ஆனால், உண்மை என்னவென்றால், அத்தகைய ஹரிபக்தர்கள் நீராடுவதால்தான் கங்கை புனிதமடைகின்றது. அப்படி அந்த சமயத்தில், அங்கு 1. அத்ரி, 2. வசிஷ்டர், 3. ச்யவனர், 4. சரத்வான், 5. அரிஷ்டநேமி, 6. ப்ருகு, 7. ஆங்கிரஸ், 8. பராசரர், 9. விஸ்வாமித்திரர், 10. பரசுராமர், 11. உதத்யர், 12. இந்திரப் பிரமதர், 13. இத்மவாஹர், 14. மேதாதிதி 15. தேவலர், 16. ஆர்ஷ்டிஷேனர், 17. பரத்வாஜர், 18. கௌதமர், 19. பிப்பலாதர், 20. மைத்ரேயர், 21. ஔர்வர், 22. கவஷர், 23. கும்பயோனி (அகஸ்தியர்) 24. த்வைபாயனர் 25. நாரதர் மற்றும் பிற தேவரிஷிகள், ப்ரும்மரிஷிகள், அருணர் முதலான ராஜரிஷிகளும் வந்திருந்தனர். இப்படியாக ப்ரும்ம ரிஷிகள், தேவரிஷிகள், ராஜரிஷிகள் எல்லோரும் அங்கு வந்திருந்தனர்.

பரீக்ஷித்து அந்த ரிஷிகளின் கோத்ரம், ப்ரவரம் முதலியவைகளை அறிந்திருந்து அவர்களைப் பூஜித்தான். தேவரிஷிகளும், ப்ரம்ம ரிஷிகளும், ராஜரிஷிகளும் சுகாஸனத்தில் அமர்ந்த பின்பு மீண்டும் ஒருமுறை அவர்களை நமஸ்கரித்தான்.

"மஹாபாபி நான். உலக சுகங்களிலேயே என்றும் ஈடுபட்டவன். சமீகர் என்ற மஹரிஷிக்கு குற்றமிழைத்தேன்.


Please renew your subscription to MADHURAMURALI

அவருடைய குமாரர் ச்ருங்கி என்பவரால், இன்றிலிருந்து ஏழாவது நாள் தக்ஷகன் என்ற பாம்பு கடித்து சாகக்கடவது என்ற சாபமும் இடப்பட்டேன். அந்த சாபத்தையும் நான் வாஸுதேவனாகவே பார்க்கின்றேன். ஏனென்றால் அந்த சாபம் வரவில்லை என்றால், நான் உலக சுகங்களிலேயே விழுந்து கிடப்பேனேயன்றி, வைராக்யத்தை அடைய மாட்டேன். உங்களைப் போன்ற ஒரு மஹரிஷியிடத்தில் நான் அபசாரப்பட்டுவிட்டதால், என்னை நீங்கள் தள்ளலாகாது. வாஸுதேவனிடத்தில் மனதை வைத்து உங்களை நான் சரணடைந்துள்ளேன். சரணாகதி செய்தவனை தள்ளலாகாது. என்னைப் பாம்பு நன்றாகக் கடிக்கட்டும். அதைப்பற்றி நான் கவலைப்படவில்லை. அதற்குள் எனக்கு வாஸுதேவனுடைய கதையைச் சொல்லுங்கள். நான் எவ்வளவு பிறவி எடுத்தாலும் அத்தனை பிறவியிலும், எனக்கு வாஸுதேவனிடத்தில் பக்தியையும், அவனுடைய அடியார்களிடத்தில் பக்தியையும், அவர்களுடைய சேர்க்கையும் எனக்கு ஏற்படட்டும். எல்லோரிடமும் எனக்கு நட்பும் ஏற்படட்டும்" என்று பிரார்த்தித்து, அவர்களை விழுந்து வணங்கினான்.

தந்தை இப்படிக் கிளம்பிவிட்டதால், ராஜ்ய பாரம் ஜனமேஜயனிடம் வந்தது. மனதில் உறுதிகொண்ட பரீக்ஷித்து கங்கையின் தெற்குக் கரையில் கிழக்கு முகமாக தர்ப்பைகளைப் பரப்பி வடக்கு முகமாக அமர்ந்தான். அப்பொழுது அவனுடைய வைராக்யத்தையும் உறுதியையும் கண்டு, வானத்திலிருந்த தேவர்கள் புஷ்பமாரி பொழிந்தனர். துந்துபிகள் முழங்கின.

இது பரீக்ஷித்திற்கு மட்டும் நடக்கக்கூடிய ஒரு விஷயம் இல்லை. நாம் ஒவ்வொருவரும் உண்மையான வைராக்கியத்தை அடைந்து, மனஉறுதியுடன் அந்த வாஸுதேவனை பஜிக்க ஆம்பித்தால், தேவர்களும் நம்மீது சந்தோஷப்பட்டு புஷ்பமாரி பொழிவார்கள். துந்துபிகள் முழங்கப்படும். நரகத்தின் வாயில்கள் மூடப்படுகின்றன. சொர்க்கத்தின் வாயில்கள் திறக்கப்படுகின்றன. அப்பொழுது அங்கு கூடியிருந்த ரிஷிகள் அனைவரும் அவனை மனமுவந்து ஆசீர்வதித்தார்கள். "அவன் செய்யத்தக்கதை செய்தவனாவான்'' என்று கொண்டாடினார்கள்.

(கனியும்)



Please renew your subscription to MADHURAMURALI

# அனுபவம் 3
# –ஆத்மஸ்தானம்

–ஸ்ரீபத்மபாதர்

*இருமுலை நடுமார்பு அடிவயிறு இதன்மேல்*
*இரு முப்பொருள் உள, நிறம் பல*
*இவற்றுள் ஒரு பொருள் ஆம்பல் அரும்பு என*
*உள்ளே இரு விரல் வலத்தே இருப்பது இதயம்*
*(உ-நா-அ-18)*

*அதன் முகம் இகல் உளது அகம் உள சிறு துளை*
*அதனில் ஆசாதியொடு அமர்ந்து உளது*
*இரும்தமம் அதனை ஆசிரித்து உள அகிலமா*
*நாடிகள் அது வளி, மனது, ஒளி அவற்றினது இருப்பிடம்*
*(உ-நா-அ-19)*

(ரமண மஹரிஷிகளின் உள்ளது நாற்பது அனுபந்தம் பாடல்களிலிருந்து)


வேதாந்த சாஸ்திரப்படி, இருதய ஸ்தானம் அல்லது ஆத்மஸ்தானம் என்பது, இரு மார்புகளுக்கு இடையே உள்ள ஒரு இடத்தைத்தான் குறிக்கிறது. வேதாந்த நூல்கள் என்ன சொல்கின்றது என்றால், மனதின் உற்பத்தி ஸ்தானமும் ஆத்மஸ் தானமும் ஒன்று என்கின்றன.

இதற்கு நிரூபணமாக என்ன சொல்லலாம் என்றால், இன்றும் இன்று வரை, மருத்துவத்தில் உடலில் உள்ள உறுப்புகள் எல்லாம் எங்கே இருக்கின்றன என்று சொல்ல முடிகிறது. ஹார்ட் (இருதயம்) எங்கே? கணையம் எங்கே? லிவர் எங்கே? கிட்னி எங்கே? என்றால் சொல்லி விட முடியும். ஆனால், மனது எங்கே இருக்கிறது என்பதை எந்த விதத்திலும் சொல்ல முடிவதில்லை.


Please renew your subscription to MADHURAMURALI

*ஒருவனால் ஐந்து கிலோ எடைதான் தூக்க முடியும் என்றால் அவனிடம் பத்து கிலோ எடையை கொடுக்க முடியாது. அவன் சிரமப்படுவான். அதுபோல் ஒவ்வொருவராலும் இந்த அளவுதான் மனதில் இருக்கும் கஷ்டத்தை தாங்க முடியும் என்று இருக்கிறது. அது அவரவரின் மனோபலத்தை பொறுத்தது.*


இன்று பலருக்கு டிப்ரஷன் என்கிற வியாதி இருக்கிறது. டிப்ரஷன் என்றால் என்ன? ஒருவனால் ஐந்து கிலோ எடைதான் தூக்க முடியும் என்றால், அவனிடம் பத்து கிலோ எடையை கொடுக்க முடியாது. அவன் சிரமப்படுவான். அதுபோல், ஒவ்வொருவராலும் இந்த அளவுதான் மனதில் இருக்கும் கஷ்டத்தை தாங்க முடியும் என்று இருக்கிறது. அது அவரவரின் மனோபலத்தை பொறுத்தது. இது தாங்க முடியாமல் போகும்பொழுது இப்படி நடக்குமோ அல்லது அப்படி நடக்குமோ என்றெல்லாம் எண்ணங்கள் வந்து கொண்டே இருக்கும்.



இதுதான் டிப்ரஷன் (மன இறுக்கம்) என்கிற வியாதி. அவர்களிடம் போய் உங்களுக்கு என்ன தொல்லை என்றால், இந்த உடலில் மார்புகளுக்கு இடையே உள்ள இந்த மேற் குறிப்பிட்ட ஸ்தானத்தை காட்டி, இங்கு வலிக்கிறது என்று சொல்வார்கள். அங்கு வலி வருகிறது என்பதே என்ன அறிகுறி என்றால், மறுபடி மறுபடி எண்ணங்கள் மிக அதிக அளவில் தோன்றி, அது தாங்க முடியாத அளவு அவர்களுக்கு துக்கத்தை தருவதனால், அவர்களுக்கு அந்த இடத்தில் ஒரு அசௌகரியம் ஏற்படுகிறது. இதுதான் மனோவியாதி. மனதில் ஏற்படும் கஷ்டம் இப்படி இந்த இடத்தில் சரீரத்தில் வெளிப்படுவதாலேயே, மனதின் உற்பத்தி ஸ்தானம் இதுதான் என்று தெளிவாக சொல்லலாம்.



Please renew your subscription to MADHURAMURALI



பிரார்த்தனை மிக சக்தி வாய்ந்த ஆத்ம சக்தி.

பிரார்த்தனையை போன்று பரிசுத்தப்படுத்துவது வேறு ஒன்றும் கிடையாது. ஒழுங்காக நாள்தோறும் பிரார்த்தனை செய்து வந்தால், உங்களது வாழ்க்கை நன்முறையே உருவாக்கப்படும்.

பிரார்த்தனை மனதிலுள்ள கவலைகளை போக்கி, அதை லேசாக்கி அமைதி, பலம், தூய்மை மூன்றும் சேர்ந்து மனதில் அமைய வழிகோலுகிறது.

பிரார்த்தனை பல அற்புதங்களை ஆற்றுகிறது. பிரார்த்தனை மலைகளையே பெயர்க்க வல்லது. மருத்துவர்களால் கைவிடப்பட்ட நோயாளிகள் கூட, பிரார்த்தனையினால் உயிர் பெற்று எழுந்துள்ளனர். பிரார்த்தனையால் நோய்களை குணப்படுத்துவது என்பது அனைத்து மதங்களாலும் ஒப்புக்கொள்ளப்பட்ட விஷயம்.

எந்த நிலையிலும் அருமருந்தாக அமைகிறது பிரார்த்தனை. பல தடவைகளில், நான் பிரார்த்தனையின் பலனை அற்புத சக்தியை அனுபவித்திருக்கிறேன். நீங்களும் அவ்வுயர் தன்மையை அனுபவிக்கலாம்.

இந்த நிமிடம் முதல் ஆழ்ந்த பிரார்த்தனையில் ஈடுபடுங்கள். அதி அற்புத பலனை பெற்று நித்யானந்தத்தை அடையுங்கள்.



Please renew your subscription to MADHURAMURALI

# ஸ்வாமி ராமகிருஷ்ணானந்தர் – 3

சென்னை ராமகிருஷ்ணா மடம் – ராமகிருஷ்ணானந்தரின் 150வது ஜெயந்தி விழா ஜூலை 15, 2012 அன்று ஸ்ரீஸ்வாமிஜி ஆற்றிய உரை

---

ஸ்ரீராமகிருஷ்ணரை போன்று குட்டிக்கதைகளை அழகாக சொன்னவர்கள் யாருமே இல்லை. அந்த சின்ன கதையில் ஆழ்ந்த கருத்து இருக்கும். அதற்கு பல பக்கங்களில் அர்த்தம் சொல்லிக்கொண்டு போகலாம்.

அவர் பிறந்த ஊரில் பல வித்வான்கள் இருந்தனர். அவர்கள் கூடி விவாதிக்கையில், சிறுவரான ராமகிருஷ்ணரும் அங்கு சென்றார். "நீங்கள் என்ன விவாதிக்கிறீர்கள்?" என்று கேட்டார் சிறுவரான கதாதரர். அவர்கள், "பிரும்ம விசாரம் செய்கிறோம்" என்றனர். "நான் சொல்லட்டுமா" என்று கதாதரர் வினவ, அவர்கள் எல்லோரும் கேலி செய்தனர். ராமகிருஷ்ணர் உடனே, "பிரும்மம் என்பது எச்சில் படாதது" என்று ஒரு வரியில் அழகாக சொல்லி விட்டார். மனம், வாக்கு, அறிவு ஆகியவற்றிற்கு எட்டாதது என்று, எதை, வேதாந்த வாக்கியங்களை கொண்டு வித்வான்கள் சொல்கின்றனரோ, அதை ஒரே வரியில் சுலபமாய் அழகாக சொல்லி விட்டார் கதாதரர்.

ராமகிருஷ்ணர் வாழ்நாள் முழுவதும் செய்த உபதேசங்களையோ அல்லது அவர் சொன்ன குட்டி கதைகளையோ சொல்லாமல், ஒருவரால் எந்த தேசத்திலும் உபன்யாசம் செய்யவே முடியாது. ராமாயணம், பாரதம், சாஸ்–-திரம், வேதம் போன்றவற்றை பிரமாணம் காட்டுவது போல் ராமகிருஷ்ணர் இப்படி சொல்லி உள்ளார் என்று சொல்வதும் அவசியமாகிறது. அப்படிப்பட்ட ஆழ்ந்த கருத்துக்கள் கொண்டது ராமகிருஷ்ணரின் உபதேசங்கள்.

உலகம் முழுவதும் உள்ள அனைத்து நாடுகளிலும் ராமகிருஷ்ணரின் உபதேசங்களும் அதன் மூலம் ராமகிருஷ்ணரின் அருளும் பரவி இருக்கிறது. ராமர் படத்தையோ


Please renew your subscription to MADHURAMURALI

கிருஷ்ணர் படத்தையோ அடையாளம் தெரியாத குழந்தை இருக்க முடியாது. மூன்றாவதாக, ராமகிருஷ்ணரின் படத்தைத்தான் எந்தவொரு குழந்தைக்கும் அடையாளம் தெரியும்.

அவதாரம் என்றால் இறங்கி வருதல் என்பர். வைகுண்டத்தில் இருந்தோ, கைலாசத்தில் இருந்தோ இறங்கி வருகிறார் என்பதில்லை. தனது ஸ்திதியில் இருந்து இறங்கி சாமான்ய மனிதர்களுடன் கலந்து பழகுகிறார் என்பதுதான் அவதாரத்திற்கு இருக்கக் கூடிய சிரேஷ்டம்.

மனிதன் போல பிறந்து வாழ்ந்தாலும், அவன் போல் துக்கப்பட்டாலும், அவன் அனுபவிக்கும் துக்கத்தில், அவதார புருஷர் மூழ்கி இருக்கிறார் என்பது ஏற்புடையது அல்ல. ராமாவதாரத்தில், சீதையை தொலைத்து விட்டு ராமன் மனிதன் போலவே துக்கப்படுகிறான்; அழுகிறான்; ஆனால் அவன் ஆனந்தமயமானவன். அழுகை மயமாக இருப்பதற்கு, மனிதன் போதும். ஆனந்தமயமாக மட்டுமே இருப்பதற்கு, தெய்வம் தனது நிஜஸ்திதியிலேயே இருந்து விடலாம். மனிதனாக பிறந்து எவ்வளவு துக்கப்பட்டாலும் தனது ஆனந்தத்திலிருந்து சிறிதும் நழுவாமல் இருப்பது என்பதுதான் அவதாரத்தில் இருக்க கூடிய சிரேஷ்டம். இதை ராமகிருஷ்ணரின் சரித்திரத்தில் நன்கு பார்க்கலாம். வேதமும் உபநிடதங்களும் எதை பற்றி தெரியவில்லை என்று சொல்லி கைவிரிக்கிறதோ, அந்த பரபிரும்மம், கருணையினால் வந்து பிறப்பதே அவதாரம்.

அவதாரங்களும் தனியாக ஏற்படாது. இரண்டிரண்டாகத்தான் ஏற்படும். தெய்வம் சிவ,சக்தியாக இருக்கிறது. லக்ஷ்மி, பெருமாளை பிரியாமல் இருக்கிறாள். அப்படித்தான் அவதாரமும் இரண்டாக ஏற்படும். அதில் ஒரு அவதாரம் தவம் செய்வார். மற்றொரு அவதாரம் தவம் செய்பவர் எதை எல்லாம் ஆசைப்பட்டாரோ அதை எல்லாம் செயலாற்--றுவார். ராமகிருஷ்ணரின் காலத்தில் வாழ்ந்தவர்கள்தான் தியாகராஜர், வள்ளலார், நாராயண குரு போன்ற மஹான்கள். ஆனால் அவர்கள் அனைவரும் ராமகிருஷ்ணர் போன்று பிரசித்தியாகவில்லை. இதற்கு காரணம் அவர்களுக்கு ஒரு


Please renew your subscription to MADHURAMURALI

விவேகானந்தர் இல்லாததுதான். விவேகானந்தரின் சேவையும் குரு பக்தியும் ஆச்சரியமானது. ஏழே வருடங்கள்தான் அவர் காரியம் செய்து இருக்கிறார். ஆனால் 700வருடங்களில் ஒருவரால் என்ன காரியம் செய்ய முடியுமோ, அதை செய்து விட்டு போயிருக்கிறார். சிற்றூருக்கு போனால் கூட அங்கு ஒரு விவேகானந்த வித்யாலயாவை பார்க்கிறோம்.

ராமகிருஷ்ணர் பகவானிடம் ப்ரேமை செய்து, கரைந்து போனார். விவேகானந்தரோ மக்களுக்கு சேவை செய்து, கரைந்து போனார். ராமகிருஷ்ணர் தான் பூஜை செய்த காளியிடம், உலகம் அனைத்தையும் கண்டார். விவேகானந்தரோ, தான் சேவை செய்த மக்களிடம், காளியை கண்டார். இப்படி ஒன்று ப்ரேமாவதாரமாகவும் மற்றொன்று சேவாவதாரமாகவும் இருப்பதை பார்க்கிறோம்.

ராமகிருஷ்ணரின் வாழ்வில் ஒரு ஆச்சரியத்தை பார்க்கலாம். ஒருவர் தன் வாழ்நாள் முழுவதும், பதஞ்சலி சொன்னபடி, யம, நியம, ஆசன, பிராணாயாம, பிரத்யாஹார, தாரணை, தியான, சமாதி என்கிற அஷ்டாங்க யோகத்தை கடைப்பிடித்து, அந்த ஜன்மத்திலேயே பகவானை ஹிருதயத்தில் சாக்ஷாத்காரம் செய்வாரே எனில் அதுவே பெரிய விஷயம். அதுபோல் பக்தியிலும் பகவானை சாந்த பாவத்திலோ, வாத் ஸல்ய பாவத்திலோ, சக்ய பாவத்திலோ, சிருங்கார பாவத்திலோ பக்தி செய்து, அந்த பாவனையை வாழ்நாள் முழுவதும் கடைப்பிடித்து, பகவானை சாக்ஷாத்காரம் செய்வதே பெரிய விஷயம். அதுபோலவே ஒருவர் பார்வையை உண்முகமாக்கி நான் சரீரமில்லை; மனதில்லை; அறிவில்லை; பிராணனில்லை; என்று ஆன்ம விசாரம் செய்து, ஆத்மசாக்ஷாத்காரம் பெறுவதும் மிக பெரிய விஷயம். அல்லது கிருஹஸ்த தர்மத்தில் சொல்லியபடி வாழ்ந்து, அதுவே மோக்ஷ சாதனம் என்று இருப்பதே பெரிய விஷயம். இப்படி, அந்தந்த மார்க்கங்களை பயின்று, அதில் சித்தி பெற்ற மஹான்கள், அந்தந்த மார்க்கங்களில் மட்டும்தான், தன்னிடம் வருபவர்களுக்கு பதில் சொல்வர்.

(தொடரும்)



Please renew your subscription to MADHURAMURALI

**Our Humble Pranams to the Lotus feet of His Holiness Sri Sri Muralidhara Swamiji**



**Guruuram Consulting Private Ltd**



Please renew your subscription to MADHURAMURALI

*எனக்கு தெரிந்த ஒருவர் என்னை ஒருநாள் முருகன் கோவில் சன்னதியில் சந்தித்தார். உபன்யாசத்திற்காக நான் அங்கு சென்றிருந்தேன். அவர் என்னிடம், "முருகனிடம் என்ன வேண்டி கொண்டீர்கள்" என்று கேட்டார். நான், "எதுவும் பிரார்த்திக்கவில்லை" என்றேன். ஏன்? என்றார். "பகவான் ஹரி எனக்கு ஏதாவது குறை வைத்திருந்தால் அல்லவா, நான் வேறு தெய்வங்களிடம் பிரார்த்தனை செய்ய அவசியம்" என்றேன்.



*உலகத்தில் நடக்கும் எல்லா செயல்களையும் பகவான்தான் நடத்தி வைக்கின்றான். ஆனால், அதற்கான பெருமையை மனிதர்கள் CLAIM செய்யும்பொழுது பகவான் வருத்தப்படவில்லை; சந்தோஷமே படுகின்றான். மனிதனுக்கு, எல்லாம் பகவானால்தான் நடந்தது; நடக்கின்றது என்று தெரிந்தாலும், அது தன்னால் நடந்தது என்று நினைத்தே பெருமைப்படுகின்றான். அதற்கான CREDITஐ பகவானுக்கு கொடுப்பதற்கு, மனது வருவது இல்லை.



–மஹாரண்யம் ஸ்ரீஸ்ரீ முரளீதர ஸ்வாமிஜி



Please renew your subscription to MADHURAMURALI

## சக்தி தரும் சங்கீர்த்தனம்

..... **ஸ்வாமி சிவானந்தா**

இறைவனுடைய சொருபமே சங்கீர்த்தனம். வேதங்களுடைய சாரமாக சங்கீர்த்தனம் அமைகிறது. பக்தர்கள் சேர்ந்து இறைவனுடைய நாமத்தை பாடுவதே சங்கீர்த்தனம். இதில் அனைவரும் மனத்தூய்மையோடு, தெய்வீக எண்ணத்தோடு ஈடுபட வேண்டும். சங்கீர்த்தனம் மனதை உயர்நிலைக்கு இட்டு செல்கிறது. நாமமும் நாமி அல்லது இறைவனும் பிரிக்க முடியாதவர்கள். நாமம், நாமியை விட மகத்தானது. ஒருவன் இறந்தாலும் அவன் பெயர் நெடுநாள் நினைக்கப்படுகிறது. காளிதாசன், வால்மீகி, துளசிதாஸ் போன்றோர் இன்றும் நினைக்கப்படுகிறார்கள். இறைவனுடைய பெயரை பக்திபாவத்துடன் பாடுவதே சங்கீர்த்தனம்.

சங்கீர்த்தனம் தன்னை மறக்க செய்கிறது. சங்கீர்த்தனம் சரீர உணர்வுக்கு மேல் ஒருவனை இட்டுச் செல்கிறது. சங்கீர்த்தனம் கடவுள் தரிசனத்திற்கு வழிகோலுகிறது. சங்கீர்த்தனம் அன்பை வளர்க்கிறது. கலியுகத்தில் சங்கீர்த்தனம்தான் இறைவனை அடைவதற்குரிய எளிய துரித பாதை. இறைவனுடைய பெயரில் அதி அற்புதமானதோர் சக்தி நிலவுகிறது. உணவினால் மட்டும் ஒருவன் உயிர் வாழ முடியாது. ஆனால் இறை நாமத்தில் ஒருவன் உயிர் வாழ முடியும்.

சங்கீர்த்தனத்தினால் ஏற்படும் அலைகள் மனதை எளிதிலே கட்டுப்படுத்த பக்தர்களுக்கு பேருதவி புரிகின்றன. அவை மனதை மாற்றி அமைக்கின்றன. அவை மனதை மிக உயரிய நிலைக்கு இட்டுச் செல்கின்றன. அந்தரங்க சுத்தியோடு அடிமனத்திலிருந்து, தூய பக்தி பாவத்துடன், ஒருவன் சங்கீர்த்தனம் செய்வானேயானால், அதனால், மரங்கள், பறவைகள் மிருகங்கள் கூட ஆட்கொள்ளப்படுகின்றன. சங்கீர்த்தனத்தின் வலிமை அத்தகையது. ரிஷிகளும் சித்தர்களும், சங்கீர்த்தனம் நடக்குமிடத்தை தேடி வருகிறார்கள். சங்கீர்த்தனம் நடக்குமிடத்தை சுற்றிலும், மிகுந்த பிரகாசம் நிலவுவதை காணலாம்.



Please renew your subscription to MADHURAMURALI

சங்கீர்த்தனத்தினால் மனம் தூய்மை அடைகிறது. அது நல்ல பரிசுத்த எண்ணங்களால் நிரம்பி நிற்கிறது. அன்றாடம் செய்யும் சங்கீர்த்தனம் நல்ல சம்ஸ்காரங்களை வலுப்படுத்துகிறது. நல்லவற்றையே நினைக்கும் ஒருவனுடைய மனம் நல்ல எண்ணங்களையே எண்ணும் வழக்கத்தை வளர்த்து கொள்கிறது. தொடர்ந்த நல்ல எண்ணங்களால் அவனுடைய ஒழுக்கமே சிறப்படைகிறது. சங்கீர்த்தனம் செய்யும்பொழுது இறைவனை குறித்தே எண்ணப்படுவதால் ஒருவனுடைய மனம் இறையுருவாகவே மாறியமைகிறது. அன்பர்களே! நாள் தோறும் சங்கீர்த்தனத்தில் ஈடுபடுங்கள். சங்கீர்த்தன பக்தி ப்ரச்சாரத்தில் முனையுங்கள். சங்கீர்த்தனத்தின் மூலம் விஸ்வ ப்ரேமையை வளருங்கள். சங்கீர்த்தனம் செய்வதன் மூலம் வீடு தோறும், வைகுண்டத்தை விளங்க செய்யுங்கள். இசைக்கருவிகள் இல்லாமலேயே சங்கீர்த்தனம் நடைபெற வேண்டும்.

**நல்லவற்றையே நினைக்கும் ஒருவனுடைய மனம் நல்ல எண்ணங்களையே எண்ணும் வழக்கத்தை வளர்த்து கொள்கிறது.**

இங்ஙனம் செய்யப்படும் சங்கீர்த்தனத்தில் அபூர்வமான முறையிலமையும் சொல்லொணா ஆனந்தம் நிலவுகிறது. சங்கீர்த்தனம் செய்யும்பொழுது இறைவன் உங்களுடைய உள்ளத்தில் இருப்பதை உணருங்கள். அத்துடன் உங்களிடமுள்ள அறியாமை நீங்கி, அறிவு பிரகாசிப்பதாக கருதுங்கள். இறைவனுடைய பண்புகளை தியானம் செய்யுங்கள். அதிகமான பலனை அடைவீர்கள். தொடர்ந்து செய்யப்படும் அகண்ட கீர்த்தனம் அதிக பலன் தரும் ஆத்மீக சாதனையாகும். அகண்ட கீர்த்தனத்தில் ஈடுபடும்பொழுது, மனத்தினால் புறப்பொருள்களை எண்ண முடியாது. மனம் உயர் பண்புகளால் நிறைந்து நிற்கிறது. அகண்ட கீர்த்தனத்தினால் பேரமைதியும் பேரானந்தமும் நிலவுகிறது.



Please renew your subscription to MADHURAMURALI

சங்கீர்த்தன உலகத்திலும் ஊழல்கள் காணப்படுகின்றன. சங்கீர்த்தனத்தை வருமானமாக பலர் பயன்படுத்துகின்றனர். மீராவை போன்றும் சைதன்யரை போன்றும் பலர் நடிக்க தொடங்கி உள்ளனர். அரங்கில் அமர்ந்து தாங்கள் இறைவனை கண்டதாகவும் பாவசமாதி அடைந்துவிட்டதாகவும் கூறுகின்றனர். இவர்கள் மக்களை ஏமாற்றுகின்றனர். இவர்களை கண்டு மக்கள் ஏமாந்து போக கூடாது.

இறைவனது தரிசனம், அவ்வளவு இலேசானதல்ல. மீராக்களும் அவதார புருஷர்களும் ஐநூறு வருடங்களுக்கு ஒருமுறைதான் தோன்றுவர். மகாத்மாக்களுடன் சத்சங்கத்தில் ஈடுபடுங்கள். மதநூல்களை படியுங்கள். ஜபம் செய்யுங்கள். தியானம் செய்யுங்கள். நான் யார் என்று விசாரம் செய்யுங்கள். சத்வ குணங்களை வளர்த்து கொள்ளுங்கள்.

நீங்கள் தவறாமல் நாள்தோறும் சங்கீர்த்தனத்தில் ஈடுபட்டு, இறையருளை பெற்று இன்புறுவீர்களாக!


**Dr. Shriraam Mahadevan**

MD (Int Med), DM (Endocrinology)
Consultant in Endocrinology, Diabetes & Metabolism
Regn. No 62256

**ENDOCRINE & SPECIALITY CLINIC**

New No. 228, old No. 169, R.K.Mutt Road,
Mandaveli, Chennai - 600 028
(Next to Ravi Pharmacy)

ADVT Ph - 044 - 24950090, Mob - 9840488777




Please renew your subscription to MADHURAMURALI

# ஆலயம் தொழுவது சாலவும் நன்று -12



திரு.எஸ்.ராஜப்பன்

நமது சத்குருநாதரின் ஆக்ஞைப்படி 14.01.2012 சனிக்கிழமை காலை நாங்கள் சென்னை அண்ணாநகர் சாந்தி காலனியில் மூன்றாவது பிரதான சாலையில் கதவிலக்கம் 146 பிளாட் எண் 4829 -ல் அமைந்துள்ள " சிறு திருப்பதி " திருக்கோயிலுக்குச் சென்றோம். இத்திருக்கோயிலில் கிழக்கே திருமுக மண்டலத்துடன் வலப்புறம் ஸ்ரீ அலர்மேல் மங்கைத் தாயார், இடப் புறம் ஸ்ரீ கோதா நாச்சியார் ஸமேத ஸ்ரீ ஸ்ரீநிவாசப் பெருமாள் மூலவராக கர்ப்பகிரஹத்தில் சேவை சாதிக்கின்றார். இவ்வளவு அற்புதமான சேவை, நமது பாரத புண்ணிய பூமியில் இங்கு மட்டுமே காணமுடிகிறது என்பது குறிப்பிடத்தக்கதாகும். இத்திருக்கோயிலில் ஸ்தாபகரான ஸ்ரீமான் ஆர்.ஸந்தான வெங்கடேச ஐயங்கார் ஸ்வாமி, இவ்வாறாக திருவேங்கடவன் இங்கு சேவைசாதிப்பதற்கான ஆதாரத்தை ஸ்வாமி வேதாந்ததேசிகன் அருளிச்செய்துள்ள ஸ்ரீ கோதா ஸ்துதியிலிருந்து கீழ்க்கண்டவாறு மேற்கோள் காட்டுகிறார்:

"ஆர்த்ராபராதி நிஜநெநேப்ய பிரக்ஷணார்த்தம்
ரங்கேச்வரஸ்ய ரமயாவிநிவேத்யமாநே
பார்ச்வே பரத்ர பவதீயதி தத்ரநாஸீத்
ப்ராயேண தேவி வதனம் பரிவர்த்திதம் ஸ்யாத் "
- ஸ்வாமி தேசிகனின் ஸ்ரீ கோதாஸ்துதி ஸ்லோகம் 24

"பெருமாளின் வலப்புறம் மஹாலக்ஷ்மியும் இடப்புறம் ஸ்ரீஆண்டாளும் எழுந்தருளியிருக்கும் காலத்தில், அபராதிகளான பக்தர்கள் கூட்டம் வந்து பெருமாளின் கடாக்ஷம் வேண்டி எதிரே நிற்கையில், அவர்களை கடாக்ஷிக்க விரும்பாத பகவான் வலப்புறம் திரும்பி ஸ்ரீமஹாலக்ஷ்மித் தாயாரைப் பார்த்திட, தாயாரோ பக்தர்களுக்காக புருஷாகாரம் (சிபாரிசு) செய்கின்றாள்" என்பதே மேலேகுறிப்பிட்டுள்ள ஸ்லோகத்தின் கருப்பொருள் என விளக்குகிறார் ஸ்தாபகர். இது போன்ற திருக்கோலம்



Please renew your subscription to MADHURAMURALI

இப்பூவுலகில் அமெரிக்காவிலுள்ள பிட்ஸ்பர்க்கில் உள்ள பென் மலையில் ஸ்ரீ வெங்டேசப்பெருமளின் திருக்கோயில் ஒன்றில் மட்டுமே காணப்படுகின்றது என இக்கோயிலின் ஸ்தாபகர் தெரிவிக்கின்றார்.

இங்கு உற்சவமூர்த்திகளாக ஸ்ரீ அலர்மேல் மங்கா, ஸ்ரீஆண்டாள் ஸமேத ஸ்ரீ ஸ்ரீநிவாஸ பெருமாள் இவர்கள் சேவை சாதிக்கிறார்கள். கர்ப்பகிரஹத்திற்கு வடக்குப்புறம் (பெருமாளுக்கு இடப்புறம்) ஸ்ரீ வாமனஸ்வரூப ஆஞ்சனேயர் சேவை சாதிக்கிறார். மேலும் இங்கு ஸ்ரீ சுதர்ஸன ஆழ்வாரும், ஸ்ரீ யோகநரஸிம்ஹரும், ஸ்ரீ சுதர்ஸனரின் உற்சவ மூர்த்தியும், ஸ்ரீ லக்ஷ்மி ஹயக்ரீவரின் உற்சவ மூர்த்தியும் மற்றும் ஸ்ரீ சீதா, லக்ஷ்மண, ஹனுமத் ஸ்மேத ஸ்ரீ ராமபிரான் இவர்களின் உற்சவ மூர்த்திகளும் சேவை சாதிக்கிறார்கள். ஸ்ரீ லக்ஷ்மி நரஸிம்ஹமூர்த்தியின் உற்சவர் மிக அழகாக சேவைசாதிக்கிறார். இங்கு ஸ்ரீ லக்ஷ்மி ஆதிவராஹப்பெருமாளின் மூலவர், மிக நேர்த்தியாக வீற்றிருந்து சேவை சாதிக்கிறார்.

ஸ்ரீரெங்கநாதரும் இங்கு கோயில் கொண்டுள்ளர். ராகுகேதுஸமேத ஸ்ரீதும்பிக்கையாழ்வாரும் இங்கு திருக்காட்சி அளிக்கிறார். பெருமாள் கர்ப்பக்கிரஹத்தின் தென்புறம் 5' அடி ஸ்ரீ விஸ்வரூப ஆஞ்சனேயர் "பக்த ஆஞ்சனேயர்" என்றும் "சஞ்சீவிமாருதி" என்றும் திருநாமங்கள் கொண்டு (மூலவர்) சேவைசாதிக்கின்றார். இங்கு ஸ்ரீமத் நிகமாந்த மஹாதேசிகனின் உற்சவமூர்த்தியும் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளார்.

இத்திருக்கோயில் அமைந்த வரலாறும், இங்கு ஸ்ரீபக்த ஆஞ்சனேயர் ப்ரதிஷ்டை செய்யப்பட்டதும் இத்திருக்கோயிலின் ஸ்தாபகரால் விளக்கமாக கூறியதைக் கேட்கும் யாவருமே, ஆச்சரியத்தில் மூழ்கிவிடுவர் என்பது திண்ணமாகும். அடியேனும் ஸ்தாபகரை நேரில் சந்தித்து, அவர் வாயிலாகக் கேட்ட செய்திகள் அடியேனை வியப்பில் ஆழ்த்தியது. அவற்றைக் காண்போமா?

இத்திருக்கோயிலின் (சிறு திருப்பதி) ஸ்தாபகர் "வைணவ செம்மல்" "ஸ்ரீ வைஷ்ணவ நூலாசிரியர்" ஸ்ரீமான். ஸந்தான வெங்டேச ஐயங்கார் ஸ்வாமியாவார்.

(தொடரும்)



Please renew your subscription to MADHURAMURALI

## <u>மதுரமுரளி வாசகர்களுக்கு ஒரு முக்கிய வேண்டுகோள்</u>

நமது மதுரமுரளி ஆன்மீக மாத இதழ் கடந்த 18 ஆண்டுகளாக தொடர்ந்து வெளிவர உறுதுணையாக இருக்கும் வாசகர்களான உங்களுக்கு முதற்கண் எங்களது மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

ஒவ்வொரு மாதமும் பல மதுரமுரளி பத்திரிக்கைகள் முகவரி சரியில்லாததால் தபால் நிலையத்தாரால் எங்களுக்கு திருப்பி அனுப்பப்படுகின்றன. அவற்றில் தொலைபேசி உள்ள வாசகர்களை மட்டும் தொடர்புகொண்டு, இதழ் அவர்களின் இல்லங்களை சென்று அடைய எங்களால் இயன்ற அளவு முயற்சி செய்து வருகின்றோம். ஆகவே வாசகர்களாகிய தாங்கள் மதுரமுரளி சரியான நேரத்தில் கிடைக்கவில்லை / வரவில்லை என்றாலோ, தாங்கள் சந்தா எண், முகவரி, பின்கோடு, தொலைபேசி எண், போன்ற விவரங்களை (பின்கோடு, தொலைபேசி எண் மிகவும் அவசியம்) எங்களுக்கு அனுப்ப வேண்டுகின்றோம். மேலும் அனைத்து சந்தாதாரர்களையும் தங்களது தொலைபேசி எண்ணை எங்களுக்கு தெரிவிக்க வேண்டுகின்றோம். தாங்கள் செய்யும் இந்த உதவி, இதழ் சரியான நேரத்தில் தங்களுக்கு கிடைக்கச் செய்ய எங்களுக்கு மிகவும் உறுதுணையாக இருக்கும்.

***ஆயுள் சந்தாதாரர்கள் கவனத்திற்கு*** – மதுரமுரளி இதழ் அச்சிடுவதற்கான காகிதம், அச்சு செலவு போன்றவவை, கடந்த ஆண்டுகளில் பன்மடங்காக உயர்ந்து, மேலும் அதிகரித்துக்கொண்டே வருகின்றது. எனவே தற்சமயம் ஆயுள் சந்தா புதியதாக வாங்குவது நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. மேலும் 2003க்கு முன்பு ஆயுள் சந்தாதாரர்களாக சேர்ந்தவர்கள் தங்களது ஆயுள் சந்தாவை வருட சந்தாவாக வருடாவருடம் மீண்டும் புதுப்பித்துக்கொண்டால் எங்களுக்கு பேருதவியாக இருக்கும். இது ஒரு வேண்டுகோள் மட்டுமே. மற்றபடி தங்களுக்கு மதுரமுரளி மாத இதழ் சரிவர கிடைக்கும் என்பதில் எந்த ஐயமும் இல்லை. மேலும் விவரங்களுக்கு <u>*94426 13710 / 044 2489 5875*</u> என்ற எண்களை காலை 9 - 12க்குள் தொடர்பு கொள்ளலாம்.

*பதிப்பாளர் – மதுரமுரளி*



Please renew your subscription to MADHURAMURALI

## சனாதனப்புதிர் பகுதி 50 - <u>கேள்விகள்</u> - ஆத்ரேயன்

1. இத்மவாஹன்- இவரது பெற்றோர்கள் யார்?
2. மஹாராஜா ப்ரதீபனின் மூன்று பிள்ளைகள் யார்?
3. நந்தினியை வசிஷ்டரிடம் இருந்து அபகரிக்க முயன்றவர்கள் யார்?
4. வாரணவதம் என்ற இடத்தில் துரியோதனன் பாண்டவர்களை அரக்கு மாளிகையில் அழிக்க திட்டமிட்டான். இந்த இடம் எங்கே இருக்கிறது?
5. விகுண்டன் - இவரது பெற்றோர்கள் மற்றும் மனைவி, புதல்வன் பெயர் என்ன?
6. அஷ்டாவக்ர ரிஷியை வரவேற்று அலகாபுரியில் உள்ள குபேரனது மாளிகையில் நாட்டியம் ஆடிய அப்சரஸின் பெயர் என்ன?
7. ப்ரஹ்மாஸ்திரம் துரோணாசாரியருக்கு யாரிடம் இருந்து கிடைத்தது? அதை அவர் யாருக்கு கொடுத்தார்?
8. ப்ரஹ்லாதனின் மூன்று பிள்ளைகள் பெயர் என்ன?
9. பூஜனி - இது யார்?
10. சங்கர்ஷணன் - இது யார்? அந்த பெயர் ஏற்பட காரணம்?

rb
rajmani builders
launches its new project
"rajmani's mathura"
at kolapakkam (near Porur)
well designed and ventilated 2/3 bhk homes
(825 sq. ft to 1075 sq. ft) at fair prices
ph: 98400 30711 email: rajmanibuilders@gmail.com
ADVT
website: www.rajmanibuilders.com



Please renew your subscription to MADHURAMURALI

## சனாதனப்புதிர் பகுதி 50 - விடைகள் - ஆத்ரேயன்

1. அகஸ்தியர் - லோபாமுத்ரா - தாயின் கர்ப்பத்தில் ஏழு ஆண்டுகள் இருந்தார். நாமகரணத்தின்பொழுது த்ருடஸ்யு என்று பெயர்.

2. தேவாபி (தோல் வியாதியால் பீடிக்கப்பட்டு காடு சென்று விட்டார்); பாஹ்னீகன் - (மாமா வீடு சென்று விட்டார்); சாந்தனி - அரசராக்கப்பட்டார்.

3. த்யோ என்ற வஸு; விஸ்வாமித்ரர்.

4. மீரட்டில் இருந்து வடமேற்கு திசையில் 19 மைல் தூரத்தில் "வனர்வா" என்ற பெயருடன் இருக்கிறது.

5. சந்திர வம்சத்து அரசனான ஹஸ்தி மற்றும் அவனது மனைவி யசோதரா. சுதேவா - மனைவி; அஜ்மீடன் - புத்ரன் (ஆதி பர்வா)

6. ஹாசினி

7. அகஸ்தியர் அக்னிவேசருக்கு கொடுக்க, அதை துரோணருக்கு கொடுத்தார். துரோணர் அர்ஜுனனுக்கு கொடுத்தார்.

8. விரோசனன்; கும்பன்; நிகும்பன்.

9. காம்பில்ய தேசத்து அரசனான ப்ரஹ்மதத்தனின் அரண்மனையில் வசித்த பறவை. இதற்கு எல்லா உயிரினங்களுடைய மொழியும் தெரியும்.

10. பலராமர்; தேவகியின் கர்ப்பத்தில் இருந்து ரோஹிணியின் கர்ப்பத்திற்கு யாம்ய மாயை மூலமாக மாற்றப்பட்டான்.

GLOBAL ORGANISATION FOR DIVINITY INDIA TRUST

ANNUAL DAY 2013

Date: APRIL 27, 28 AT BANGALORE

**Venue of the programme:**

Sri Vishal Bhavan, Near 17th Cross, Malleswaram Over Bridge,
'A' Block, Rajajinagar II Stage, Bangalore - 560010



Please renew your subscription to MADHURAMURALI

# பாலகர்களுக்கு ஒரு கதை



## *கண்ணன் தந்த பதில்!*

கோபாலுக்கு கணிதம் என்றால் எட்டிக்காய் கசப்பு. ஐந்திலிருந்து ஆறாம் வகுப்பு வேறு வந்து விட்டானா .. புதுப்புது கணித பாடங்கள் வேறு! எல்லாம் அவனுக்கு கஷ்டமாக இருந்தது. அவன் நண்பர்கள் எல்லாம் கணக்கை சுலபமாக போட்டு வந்தனர். அவனுக்கு மட்டும் அப்படி இல்லை. அவன் மனம் வருத்தத்தில் வாடியது.



அவன் தனக்கு ஆறுதல் தேவை என்றால் பகவான் கிருஷ்ணனிடம்தான் போவான். அன்றும் அப்படித்தான்! கணித புத்தகத்தை கீழே போட்டு விட்டு, நேரே பூஜை அறைக்கு ஓடினான். கிருஷ்ணன் அருகில் இருந்த ராதையிடம் பேசினான், "அம்மா! ஏன் எனக்கு மட்டும் இவ்வளவு கஷ்டம்? எனக்கு ஏன் இத்தனை சிரமங்களை தருகிறாய்!". ராதையும் கிருஷ்ணனும் சிரித்து கொண்டிருந்தனர். பதில் ஏதும் வராததால் மிகவும் வருத்தமாகிப் போனது அவனுக்கு. ஸ்வாமி எதுவும் பதில் தரவில்லையே என்று நினைத்து கொண்டே தோட்டத்திற்கு சென்றான். அப்பொழுது அது நடந்தது.

ஒரு வண்ணத்துபூச்சியின் கூட்டை, தோட்டத்தில் கோபால் பார்த்தான். சில நாட்களாகவே அதை அவன் பார்த்து கொண்டுதான் இருந்தான். அன்று ஆனால் அந்த புழுவின் கூட்டில் ஏதோ மாற்றம் தென்பட்டது. குனிந்து அருகில் சென்று



Please renew your subscription to MADHURAMURALI

பார்த்தான். அந்த கூட்டில் ஒரு துளை ஏற்பட்டிருந்தது தெரிந்தது. கோபாலுக்கு ஆர்வம் அதிகமானது. சில மணி நேரம் அங்கேயே உட்கார்ந்து என்ன நடக்கிறதென்று பார்த்தான். அந்த புழு அந்த கூட்டை உடைக்க முயன்று கொண்டு இருந்தது. வெகு நேரம் அப்படியும் இப்படியும் அசைந்து வந்த அது, திடீரென அசைவதை நிறுத்தி கொண்டது. கோபால், அந்த புழு, மேற்கொண்டு வெளியில் வர முடியாமல் சக்தி இழந்து விட்டது என்று நினைத்தான். முயன்று முயன்று வெளியே வர முடியாமல் துவண்டு போய் விட்டது என்று நினைத்தான். கோபாலுக்கு அதை பார்க்க பார்க்க வருத்தமாய் இருந்தது.

ஒரு வகையில் பார்த்தால், அவனுக்கு அந்த புழுவும் அவனும் ஒன்று போல தோன்றியது. "நாம் கணிதம் பயில முயன்று தோற்பதை போலவே இந்த புழுவும் தோற்று கொண்டிருக்கிறது" என்று நினைத்தான். அவனுக்கு அந்த புழுவிற்கு எவ்விதத்திலாவது உதவ வேண்டுமென தோன்றியது.

சிறுபையனல்லவா! என்ன செய்வான்? ஒரு கத்திரி எடுத்து அந்த புழுவின் கூட்டை அறுத்து எறிந்து விட்டான். இப்பொழுது, அந்த புழு மிக எளிதாக அந்த கூட்டிலிருந்து வெளி வந்து விட்டது. அப்பாடா! கோபாலுக்கு அதை பார்க்கையில் சந்தோஷமாக இருந்தது. ஆனால், அந்த மகிழ்ச்சி ஒரு சில கணம் கூட நீடிக்கவில்லை. .

அந்த புழுவின் உடம்பெல்லாம் வீங்கியது போலிருந்தது. அதற்கு சிறிய இறகுகள் இருந்தன. அவன் அந்த இறகுகள் பெரிதாகி, புழு பட்டுபூச்சியாகி பறக்கும் என்று நினைத்தான். இறகுகளும் பெரிதாகவில்லை. அதன் வீங்கிய உடம்பும் சுருங்கவில்லை. அது பறக்கவும் இல்லை. மாறாக அது தட்டு தடுமாறி தன் வீங்கிய உடம்புடனும், அரைகுறை இறகுகளுடனும் தரையில் தவழவும் முடியாமல் தவித்து கொண்டே இருந்தது. கோபாலுக்கு அதை பார்க்கையில், துக்கம் நெஞ்சை அடைத்தது. கண்களில் நீர் முட்டியது. அவன் தாய் ஒரு அறிவியல் ஆசிரியர். அம்மா என்று சப்தம் போட்டு கொண்டே



Please renew your subscription to MADHURAMURALI

ஓடினான் கோபால். என்ன கோபால்! என்று கேட்டவாறே தோட்டத்தின் பக்கம் வந்தாள் தாய். மகன் மெல்ல விசும்புவதை கண்டு என்ன என்று கேட்டாள் தாய். கோபால் நடந்த அனைத்தையும் ஒன்று கூட விடாமல் விவரித்தான்.

அவனால் புழு கஷ்டப்படுவதை சகிக்க முடியவில்லை. அவன் தாய் அவன் மோவாய்க்கட்டையை பிடித்து உயர்த்தி "கோபால்! நீ புரிந்து கொள்ளாமல் அந்த கூட்டை உடைத்து விட்டாய். அது கூட்டை கஷ்டப்பட்டு உடைத்து கொண்டு வந்திருந்தால், அதன் வீங்கிய உடலிலிருந்து நீரானது வடிந்து அந்த சிறிய இறகுகளுக்குள்ளே புகுந்திருக்கும். இறகுகள் உடனே பெரிதாகி விடும். அதன் மூலம் அது சுலபமாக பறக்க ஏதுவாய் அமைந்திருக்கும். அப்படித்தான் அது வர வேண்டும் என்பது இறைவன் அதற்கு ஒரு வழி விதித்து இருக்கிறான். அந்த கூட்டில் இருந்து அப்படி அது சிரமப்பட்டு வந்திருந்தால், இப்படி பறக்க முடியாமல் கஷ்டப்படாது அது! இறைவன் தரும் கஷ்டம் என்பது, கஷ்டம் தருவதற்காக அல்ல. நம்மை உயர்த்தி விடுவதற் காக. கஷ்டப்படாமல் யாராவது முன்னேறி இருக்கிறார்களா? விடாமுயற்சியுடன் கூடிய உழைப்பே ஒருவனுக்கு உயர்வு தருமல்லவா? அதைத்தானே இதுவும் சொல்கிறது" என்றாள்.

கோபாலுக்கு ஏதோ டக்கென பிடிபட்டது போலிருந்தது. அன்னையின் அரவணைப்பில் இருந்து விடுவித்து கொண்டான். கணிதப்புத்தகம் இருக்கும் இடத்தை நோக்கி நடந்தான். அவனை பொறுத்தவரை, ராதாகிருஷ்ணரிடமிருந்து சொல்லாமல் பதில் வந்து விட்டது. உழைப்பும் விடாமுயற்சியும் இருந்தால், கணிதம் கற்கலாம் என்று அவனுக்கு புரிந்து விட்டது.

அதே சமயத்தில், ராதாகிருஷ்ணரின் மேல் போடப்பட்டு இருந்த மாலை அழகாக கீழே விழுந்ததை யாரும் கவனிக்கவில்லை!

மகாவித்துவான் மயிலம்.வே.சிவசுப்பிரமணியன் அவர்களின் **மாலே மணிவண்ணா** தொடர் அடுத்த இதழில் இடம்பெறும்.



Please renew your subscription to MADHURAMURALI

## சத்சங்க செய்திகள்

**பிப்ரவரி 24, 25, 26** தேதிகளில் ஸ்ரீஸ்வாமிஜி அவர்கள், தூத்துக்குடி, சிவகாசி மற்றும் வத்தலகுண்டு நாமத்வார்களுக்கு விஜயம் செய்து சத்சங்கம் நிகழ்த்தினார்கள். திரளான அன்பர்கள் வந்திருந்து குருவருள் பெற்றனர்.

**மார்ச் 1 –** ஸ்ரீஸ்வாமிஜி அவர்கள் நம் சாந்தீபனி குருகுல டிரஸ்டின் ஸ்ரீரங்கம் ப்ரேமிக ஸ்ரீவேதாஸ்ரமத்திற்கு சென்றிருந்தார்கள்.

**மார்ச் 3,4** தேதிகளில் ஸ்ரீஸ்வாமிஜி அவர்கள், பெங்களூர் ஸ்ரீசுந்தர ஆஞ்சநேயர் கோவிலுக்கு விஜயம் செய்திருந்தார்கள். 3ஆம் தேதி ராமையா ரோடில் உள்ள ஸ்ரீகல்யாண வெங்கடேஸ்வர தேவாலயத்தில், ஸ்ரீபாலசுப்ரமண்ய ஸ்வாமி தேவஸ்தான ஸமிதி இணைந்து நடத்திய சத்சங்கத்தில் கலந்து கொண்டு அருளுரை வழங்கினார்கள். 4ஆம் தேதி கர்நாடக மாநில சம்பகெர கிராமத்தில் நாமகீர்த்தனம் செய்த பள்ளி குழந்தைகளுக்கு, பிரசாதம் வழங்கினார்கள்.





**மார்ச் 6** படப்பை ஸ்ரீவரம் தரும் பெருமாள் ஆலயத்தின் பூமி பூஜை, மற்றும் கோ பூஜை ஸ்ரீஸ்வாமிஜி அவர்கள் முன்னிலையில் நடைபெற்றது.

**மார்ச் 10** கன்யாகுமரி ஸ்ரீஜய ஹனுமான் பிரதிஷ்டா தினமான மஹாசிவராத்திரி அன்று காலை ப்ரேமிக வரதனுக்கு திருமஞ்சனம், பூஜை, ஸ்வாமி புறப்பாடு, மாலை ஜய ஹனுமானுக்கு திருமஞ்சனம், பூஜை, வடைமாலை சாற்றுதல், இரவு வேத பாராயணத்துடன் பூஜையும் ஸ்ரீஸ்வாமிஜி அவர்கள் முன்னிலையில் மிக சிறப்பாக நடைபெற்றது. வந்திருந்த திரளான அன்பர்களுக்கு ஆஸ்ரமத்தில் மூன்று வேளையும் பிரசாதம் வழங்கப்பட்டது.

**மார்ச் 17** அன்று ராமமூர்த்தி மஹால், சோளிங்கரில் ஸ்ரீஸ்வாமிஜி அவர்கள் ஸ்ரீமத்பாகவத மாஹாத்மியம் குறித்து, திரளான அன்பர்கள் முன்னிலையில் அருளுரை வழங்கினார்கள்.



Please renew your subscription to MADHURAMURALI

**மார்ச் 18-21** தேதிகளில் ஸ்ரீஸ்வாமிஜி திருச்சி, ஸ்ரீரங்கம், கோவிந்தபுரம் சென்றிருந்தார்கள். 18ஆம் தேதி ஸ்ரீரங்கம் சிருங்கேரி மடத்தில் நடைபெற்ற ப்ரும்மஸ்ரீ தத்வமஸி கனபாடிகளின் உரையில் கலந்து கொண்டார்கள். 19ஆம் தேதி கோவிந்தபுரம் சைதன்யகுடீரத்தில் மாலை சத்சங்கம் நிகழ்த்தினார்கள். 21ஆம் தேதி ஸ்ரீரங்கம் ஸ்ரீப்ரேமிக வேதாஸ்ரம பாடசாலை வித்யார்த்திகளுடன் ஸ்ரீரங்கநாதரின் கருடசேவை தரிசனம் செய்தார்கள்.

**மார்ச் 26 -** ஸ்ரீசைதன்ய மஹாபிரபுவின் ஜெயந்தி - ஹோலி தினத்தன்று, மதுரபுரி ஆஸ்ரமத்தில் ஸ்ரீஸ்வாமிஜி முன்னிலையில் ஸ்ரீப்ரேமிக வரதன் புறப்பாடு கண்டருளினார். சென்னை ப்ரேமிக பவனத்திலும் அனைத்து நாமத்வார் மையங்களிலும் அகண்டமாக நாமகீர்த்தனம் நடைபெற்றது.

**மார்ச் 27** - கும்பகோணம் ஸ்ரீஅம்மாளு அம்மாள் அவர்களின் ஸ்மாரக தினம், ஸ்ரீஸ்வாமிஜி முன்னிலையில் சென்னை ப்ரேமிக பவனத்தில் அனுஷ்டிக்கப்பட்டது.

**மார்ச் 6 -** மஹாரண்யம் கிராமத்தை சுற்றி உள்ள மாணவர்களுக்கான சிறப்பு மஹாமந்திர கூட்டு பிரார்த்தனை மதுரபுரி ஆஸ்ரம வளாகத்தில் நடைபெற்றது. இதில் ராமுஜி, பம்மல் பாலாஜி கலந்து கொண்டு உரையாற்றினார்கள்.





Please renew your subscription to MADHURAMURALI

# ப்ருந்தாவனமும் நந்தகுமாரனும்



- ஜனனி

## ஸ்ரீஹம்ஸதாஸ் பாபாஜி மற்றும் ஸ்ரீகோபாலீபாயி -4

கோபாலீபாயின் தந்தை லக்நௌ-இல் மெஜிஸ்ட்ரேட் ஆக இருந்தார். தனது பெண், மாப்பிள்ளை, ஸம்பந்தி என்று எல்லோரும் ஸந்யாஸம் பெற்று கொண்டதை அறிந்த அவர், அதற்கு காரணமான பாபாவின் மேல் பெரும் கோபம் கொண்டார். ப்ருந்தாவனத்திற்கு சென்று, பாபாவை கடுமையாக பேசி, அவரை சிறையில் போட்டு விடுவதாகவும் பயமுறுத்தினார். பாபா, இவரது வசவு சொற்களையும், மிரட்டல்களையும் அசைவின்றி கேட்டு கொண்டிருந்தார்.

அந்த மெஜிஸ்ட்ரேட் சிறிது மௌனமானதும், பாபா சிரித்தவாறே கூறினார், "நீதிபதி ஐயா ! என்னை நீங்கள் அவசியம் சிறைக்கு அனுப்ப வேண்டும். எனக்கு இந்த ஸம்ஸாரமே ஒரு சிறை போல் தான் உள்ளது. ஆனால் இந்த சிறையை விட நீங்கள் கூறும் சிறை மேலானது. ஏனெனில் இங்கு பிச்சை எடுத்தால் தான் சாப்பாடு. அங்கோ வேளா வேளைக்கு உணவு தானே கிடைத்துவிடும். ஆனால் நீங்கள் என் மேல் கோபம் கொள்வது தான் சரியில்லை. உங்களது வேலை எல்லோரையும் சிறைக்குள் அனுப்புவது, எனதோ எல்லோரையும் சிறையிலிருந்து விடுவிப்பதாகும். ஸம்ஸாரமென்ற சிறையில், நாம், எத்தனை எத்தனை பிறவிகளாக உழன்று, பல கஷ்டங்களை அனுபவித்திருக்கிறோம்! இவ்வுண்மையை உணரும் அன்று, உங்கள் பெண் மற்றும் மாப்பிள்ளையைப் போல் நீங்களும் இந்த தளைகளிலிருந்து விடுபடும் முயற்சியில் இறங்குவீர்கள்.

ஸம்ஸாரத்தில் பந்தத்திற்கு காரணம் மோஹமே ஆகும். மோஹத்தினால் தான் ஒருவன் பெண், மனைவி, மாப்பிள்ளை, மகன், பேரன், பேத்தி என்ற உறவுகளை சாஸ்வதமாக எண்ணுகிறான். பின் திடீரென்று பிரிவு ஏற்படும்பொழுது



Please renew your subscription to MADHURAMURALI

துக்கமடைகிறான், கோபம் கொள்கிறான். உங்கள் பெண் மற்றும் மாப்பிள்ளையின் மோஹம் இப்பொழுது அழிய தொடங்கியுள்ளது. ஆனால் தங்களுக்கோ இன்னும் மோஹம் உள்ளது. இதனால்தான் பந்தங்களை அறுத்தெறிந்த அவர்களுக்கு, எந்தவித துக்கமும் ஏற்படாத போதிலும் உங்களுக்கு வருத்தமாக உள்ளது. ஸம்ஸாரத்தில் நமக்கு ஏற் படும் பந்தங்கள் ரயில் ஸ்நேஹத்திற்கு ஒப்பானதே. எந்த யாத்ரிகருக்கு பயணம் முடிந்து விடுகின்றதோ, அவர் இறங்க வேண்டியதுதான். இரயிலில் ப்ரயாணிக்கும் மற்ற பயணிகள் இதை ஆக்ஷேபிப்பது என்பது உசிதமாகவே ஆகாது. நீங்கள் பெண், மாப்பிள்ளை என்று நினைக்கும் அவர்களின் ரயில் பயணம் முடிவடைந்துவிட்டது. தாங்கள் போக வேண்டிய இடத்திற்கு மிகவும் அருகில் வந்து விட்டதால், அவர்கள் வண்டியிலிருந்து இறங்கிவிட்டார்கள். இதுதான் உண்மை. அதனால் நீங்கள் கோபிப்பதில் எந்த நியாயமும் இல்லை. ஸம்ஸாரத்தில் உழலும் ஸாமான்ய ஜீவன்கள், ரயிலில் தங்கள் இலக்கும் தெரியாமல், பயணச் சீட்டும் இல்லாமல், பயணம் செய்பவர்களுக்கு ஒப்பானவர்கள். டிக்கெட் கலெக்டர் வடிவில் வரும் காலன் தனது இஷ்டம் போல், இந்த பயணிகளை வண்டியிலிருந்து வெளியேற்றுகிறார்; அல்லது சிறையில் கொண்டு அடைக்குமாறு ஸிப்பந்திகளிடம் கூறிவிடுகிறார். ஆனால் ப்ரபுவின் க்ருபையாலோ அல்லது மஹான்களின் ஸங்கத்தினாலோ எந்த ஜீவன்களின் மோஹம் விலகிவிடுகின்றதோ, அவர்கள் வண்டியிலிருந்து இறங்கி விடுகிறார்கள். டி.டி.யிடமிருந்து தப்பித்து விடுகிறார்கள். பின் தங்கள் இலக்கை நோக்கி அவர்கள் செல்ல ஆரம்பித்து விடுகிறார்கள். நீங்களும் மோகம் விலகி, இந்த பாதையில் சென்று நிரந்தரமான உண்மையான ஆனந்தத்தையும் சாந்தியும் அடைய வேண்டும் என்று நான் பகவானைப் ப்ரார்த்திக்கிறேன்!".

பாபாவை குற்றவாளி என்று எண்ணி, மெஜிஸ்ட்ரேட் அவரிடம் தகாத முறையில் பேசியிருந்தார். இதற்கு முன்பும் அவர் பல குற்றவாளிகளை மிகவும் கடுமையாக கண்டித்து பேசியிருக்கிறார். ஆனால் எவரும் பாபா போல் நிர்பயமாக தனது தூய்மையை நிரூபித்ததில்லை.

(தொடரும்)



Please renew your subscription to MADHURAMURALI

# அப்பாலுக்கு அப்பால்



## பசவேஸ்வரர் – 14

பசவர் ஒருமுறை தன் மனைவிகளுடன் பண்டரிபுரம் அருகில் பீமா நதிக்கரை ஓரத்தில் இருக்கும் ரேவண்ண சித்தரின் சமாதிக்கு சென்றிருந்தார். அப்பொழுது அந்நதியில் பயணம் செய்கையில், பரிசல் ஓட்டிய ஒருவரின் உருக்கமான வாழ்க்கையை கேட்க வேண்டி வந்தது. சௌடைய்யா எனும் அவர், தாம் ஒரு நல்ல வாழ்க்கை நடத்தி வந்ததாக தெரிவித்தார். சமூகத்தில் அந்தஸ்துடன் வாழும் ஒருவரின் தீய நடத்தையால் தன் மனைவி வாழ்க்கையை முடித்து கொண்டாள் என்றும், அதன் பிறகு சொந்த ஊருக்கு போக பிடிக்காமல், வயிற்று பிழைப்பிற்காக இந்த வேளையை செய்து வருவதாகவும் சொன்னார்.

பசவருக்கு அவர் மீது இரக்கம் பிறந்தது. "நீ செய்தது சரிதான். உழைத்து வாழ்க்கை நடத்தும் நீ, இறைவனிடம் பக்தி பூண்டு பூஜை செய்து வரலாமே" என்றார். முன்னே இருந்த பரிசல் ஓட்டுபவர் இளநகை பூத்தார் "அய்யா! கோவிலுக்குள் சென்று ஸ்வாமி தரிசனம் செய்ய முடியவில்லை. எங்களுக்கென்று சில தெய்வம் உண்டு. அதை எங்கள் முறைப்படி வணங்குவோம். அவ்வளவுதான். ஆனால் எங்களில் பலர் நேர்மையானவர்கள். என்ன, உங்களை போல் பூஜை செய்ய தெரியாது" என்றார்.

பசவர் தீர்க்கமான பார்வையை அவர் மேல் செலுத்தி "என் கழுத்தில் இருக்கும் இந்த சிவலிங்கத்தை பார். இதே போல் உனக்கும் அணிவித்தால் நீயும் பூஜை செய்வாயா? இது மிக சுலபம்" என்றவுடன் அம்மனிதர் கண்களில் பிரகாசம் தெரிந்தது.

சாதாரணமான ஒருவர் இப்படி பேசினால் எந்த ஒரு உத்வேகமும் யாருக்கும் ஏற்படாது. பேசியது பசவர் எனும் மஹாத்மா அல்லவா? சௌடய்யாவின் இருண்ட உலகிற்கு ஒரு ஒளி பிறந்தாற் போலிருந்தது. அவர் கேட்டார் "யார் எனக்கு



Please renew your subscription to MADHURAMURALI

லிங்கம் தருவார்கள்? எப்படி பூஜை செய்ய வேண்டும்?"

பசவர் அதற்கென காத்திருந்தாற்போல "அந்த கவலை அனாவசியம். நானே அணிவிப்பேன். உனக்கு மட்டுமல்ல. உன்னை போன்று யார் விருப்பப்பட்டாலும் தருவேன். என் வீட்டிற்கு வா. நான் மந்திரி பலதேவராசரின் மருமகன்" என்று சொல்லி விட்டு கிளம்பினார். பசவரின் எளிமையான பழகும் விதத்திலும் ஆறுதலான வார்த்தைகளிலும், தன் மனதை பறி கொடுத்து இருந்த சௌடய்யா, சில நாட்களில் பசவரை பார்க்க சென்றார். ஒரு குறிப்பிட்ட நாளில் சௌடய்யா தங்கி இருக்கும் இடத்திற்கே வந்து தீக்ஷை தருவதாக முடிவாயிற்று. ஏற்கனவே பசவரை பற்றி கல்யாண் நகரில் பிரசித்தி ஆகி இருந்தது. பசவரிடம் தீக்ஷை பெற ஏராளமானவர்கள் சேர்ந்தனர்.

விஷயம் மன்னன் பிஜ்ஜாலன் வரையும் சென்றது. அவனுக்கு பசவர் மேல் அசாத்திய நம்பிக்கை இருந்தது. இருப்பினும் எங்காவது ஜாதி, மத கலவரம் வந்து விடுமோ என்று பயந்தான். அதனால் நேரே பசவரை கூப்பிட்டு விசாரித்தான். "நீர் எல்லோருக்கும் தர்ம சிந்தனைகளை உண்டு பண்ணி, தீக்ஷை அளிப்பது நல்லதுதான். அதனால் தற்பொழுது இருக்கும் சமூகத்தில் குழப்பங்கள் வராதா?" என்றான்.

பசவர் மன்னனிடம் "மன்னா! உன் சந்தேகம் நியாயமானது. ஆனால் நான் பக்குவம் உள்ளோருக்குத்தான், முதலில் தீக்ஷை தர போகிறேன். பின்னர் அதை பலருக்கும் எப்படி எடுத்து செல்வது என்பதை பற்றி யோசிப்பேன். என் பின்னே வருவோர் இறைவனின் சரணத்தை பிடிக்கும் சரணர்கள் ஆகலாம். வேறு ஒரு வித்தியாசம் கிடையாது. ஜாதி என்ற பந்தத்தை விட முடியாதவர்கள் என் பின்னே வருவது முடியாது" என்றார். பிஜ்ஜாலன் திருப்தி அடைந்தான். ஆனால் ஜாக்கிரதையுடன் செய்யுமாறு சொன்னான். பசவர் தீக்ஷை தருகையில், எளிமையாக சில நிபந்தனைகளை விதித்தார். "புலால் உண்ண கூடாது. பிராணி வதை, பரதார கமனம், திருடு, கோபம், தீண்டாமை, சுயப்பெருமை கூடாது. பரமனாரின் கருணை ஒன்றை பெறுவதையே நோக்கமாக, உழைப்பில் பக்தியை அங்கமாக வைத்து, அக,புற தூய்மையுடன் பக்தி செய்ய வேண்டும் "

(தொடரும்)



Please renew your subscription to MADHURAMURALI

"மதுரமுரளி" ஆண்டு சந்தா ரூ 120
For Details: **+91-44-24895875**

"மதுரமுரளி" மாத இதழ் சந்தா அனுப்ப முகவரி:

Guruji Sri Muralidhara Swamigal Mission, 51, 7th Avenue, Ashok Nagar, Chennai - 83 .
உள்ளூர் காசோலை / நேரில் ரொக்கம் / D.D. in name of **Guruji Sri Muralidhara Swamigal Mission** / மணியார்டர் ஏற்றுக்கொள்ளப்படும்.

கொரியரில் பெற விரும்புவோர் கொரியர் செலவை தனியாக செலுத்தி பெறலாம்.

***ஏற்கனவே சந்தாதாரராக இருப்பவர்கள் தங்களது சந்தாவை புதுப்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.***


* Publisher : S.Srinivasan on behalf of Guruji Sri Muralidhara Swamigal Mission


* Copyright of articles published in Madhuramurali is reserved. No part of this magazine may be reproduced, reprinted or utilised in any form without permission in writing from the publisher of Madhuramurali.
* Views expressed in articles are those of the respective Authors and do not reflect the views of the Magazine.
* Advertisements in Madhuramurali are invited.


**ஸ்ரீஸ்வாமிஜியின் நிகழ்ச்சிகள்**

| | |
|---|---|
| ஏகாதசி | ஏப்ரல் 6, 22 மே 6, 21 |
| ஏப்ரல் 14 | சித்திரை வருட பிறப்பு |
| ஏப் 24-30 | பெங்களூரு ஸ்ரீசுந்தர ஆஞ்சநேயர் கோவிலில் பக்த விஜயம் உபன்யாசம் |
| ஏப் 29, 30 | ஸ்ரீசுந்தர ஆஞ்சநேயர் பிரதிஷ்டா தினம் |
| மே 1 | மாலை - கடலூர் ராமர் கோவில் பஜனை மடம் |
| மே 4 | அப்பர் விழா - குடியாத்தம் |
| மே 19 | மதுரை அருகே காரியாப்பட்டி ஸ்ரீகிருஷ்ணர் கோவில் கும்பாபிஷேகம் |
| மே 28 | கோபகுடீரம் ஆண்டு விழா சென்னை |

ஸ்ரீஸ்வாமிஜி அவர்களுக்குத் தெரிவிக்க வேண்டிய விஷயங்களை
Dr.A.BHAGYANATHAN, Personal Secretary to
**HIS HOLINESS SRI SRI MURALIDHARA SWAMIJI**
New No. 51, Old No. 24, 7th Avenue, Ashok Nagar, Chennai - 83.
Tel. : +9144-2489 5875, Email : contact@namadwaar.org என்னும் முகவரிக்கு அனுப்பவும்.



Please renew your subscription to MADHURAMURALI